" எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு "

26 MAR 190

பூலோகவியாசன்.

பிரதி மாதமும் பிரசுரஞ் செய்யப்படும்.

தொகுதி 3.] சென்னை 1905ஆு நவம்பர்மீ 10௳ [பகுதி 2.

" வேண்டுதல்வேண் டாமை யிலானடி சேர்ந்தார்க்
கியாண்டு மிடும்பை யில "

சித்தாந்தப்பிரகாசம்.

(11-ம் பக்கத் தொடர்ச்சி)

இனிமுதல்வனது ஞானசத்தி யதிட்டானத்தினாலே சுத்தமாயையாகிய குடிலையினின்றும் அபரநாதமும், கிரியாசத்தி யதிட்டானத்தினாலே அபரவிந்துவுந்தோன்றும். சிவம், சத்தி, நாதம், விந்து ஆகிய நான்கும் முதல்வனுக்கு நிட்களமான திருமேனியென்றும், இலயத்தானமென்றும் சொல்லப்படும். சதாசிவதத்துவம் சகளநிட்களமான திருமேனியென்றும், போகத்தானமென்றும் சொல்லப்படும். இந்தச் சதாசிவதத்துவத்திலே அட்சர சொரூபமாய்ச் சகளமாயிருக்கிற அபரநாதமும் அபரவிந்துவும் அணுசதா சிவர்களுடனடங்கும். ஈசுரமுதலிய நான்குஞ் சகளமான திருமேனியுமாய் அதிகாரத்தானமுமா யிருக்கும். முன்சொன்ன விந்துவிலேநின்றும் ஐம்பத்தோரட்சரமும், சத்தகோடி மகாமந்திரங்களும், இருபத்தெட்டுத் திவ்வியாகமங்களும், நாலுவேதமுந் தோன்றும். ஈசுரதத்துவத்திலே அட்டவித்தியேசுரரும் சுத்தவித்தையிலே சத்தகோடி மிகாமந்திரங்களும், சத்தரூபமான வெண்பத்தொரு பதமந்திரங்களும், ஆகமங்களும், வேதங்களு மடங்கும். இனிமுதல்வன் நிட்களமும், நிட்களசகளமும் சகளமுமாக மூவிதமான திருமேனிகொண்டபொழுது பராசத்தியு மூவகைப்படும். எங்ஙனமெனின், முதல்வன்சிவமுநாதமுமாக நிட்களமானபோது சத்தியும் விந்துவுமாக நிட்களையா யிருக்கும். முதல்வன் சதாசிவமாக நிட்கள சகளமாயிருந்தபோது மனோன்மணியாக நிட்கள சகளையாயிருக்கும், முதல்வன் ஈசன், உருத்திரன், மால், அயனாகச் சகளமானபோது மகேசை, உமை, திரு, வாணியாச் சகளையா யிருக்கும். இனி கலைகள் ஐந்தில் நிவிர்த்தியாவது தன்னிடத்திலே பொருந்தின ஆன்மாக்களுடைய சங்கற்பத்தை விடுவிக்கையால் நிவிர்த்தி யென்று பெயராயிற்று. பிரதிட்டையாவது தன்னைப்பொருந்தின ஆன்மாக்களுக்குச் சங்கற்பவிடுதியை நிலைபெறுவிக்கையாற் பிரதிட்டையாயிற்று. வித்தையாவது அந்தச்சங்கற்பவிடுதியி னிலைபேற்றால் ஆன்மாக்கட்கு அனைத்தறிவையும் விளக்குதலால் வித்தியாகலையாயிற்று. சாந்திகலையாவது அந்தஞானத்தாலே ஆன்மாக்கள்இராகத்துவேஷமின்றி யிருந்தபடியாலே விகற்பஞானஞ் சாந்தமாயிருக்கையாற் சாந்திகலை யென்றாயிற்று. சாந்தியாதீதகலையாவது அந்த விகற்பஞானஞ் சாந்தமான தென்கிற நினைவுங்கழன்று பரமாகாச ரூபமாய் நிற்கையால் அதீதகலையாயிற்று. இந்தக்கலைகளுந் தத்துவமும் புவனமும் அர்த்தரூபமும், வாக்கு

நான்கும் அட்சரங்களும் பதங்களும் மந்திரங்களும் வேதங்களுஞ் சத்தரூபமாயிருக்கும். ஆகலின் மகாமாயை சத்தார்த்தரூபமாக விரண்டு வடிவாயிருக்கும். படங்குடிலானாற்போலும்.

அசுத்தமாயை.

அசுத்தமாயையானது தனுகரண புவனபோகமென்னு நாலு விதமாய், அவைதாம் ஒன்றை யொன்றொவ்வாத முறைமையினை யுடையதாய், அழியாததாய், ஒருமுதலேயாய், எக்காலமுந் தோன்றாததாய், கன்மந் தொலையுமளவும் ஆன்மாக்களெல்லா வற்றிற்கும் விஷயங்களிலே யறிவை மயக்குவதாய், சடமாய், சலனமற்றதாய், தோன்றிப் பரந்த தன்னுடைய காரியமான தத்துவம் முப்பத்தொன்றினும் வியாத்தத்தை யுடைத்தாய், அச்சகலமுந் தோன்றின கூற்றிலேநின்று அடைவிற் பொருந்தி, அந்தத் தத்துவங்கள் ஒடுங்க வருகிற சங்காரகாலத்திலே அவ்வுயிர் நிலைகளெல்லாம் அங்குராதி வித்திடத்தடங்குமாறுபோலப் பொருந்து தற்கிடமாய், ஆன்மாக்கள் உள்ளபடிகாணாமல் பொய்யை மெய்யென்று காண மயக்குமலமாய் நிலைபெறும். இம்மாயை காரணரூபத்தான் மோகிப்பிக்கும், காரிய ரூபத்தாற் பயன்படும். நூல் தானாகப்பயன்படாது காரியமான படத்தாற் பயன்படுமாறுபோலாம்.

இந்தமாயைதான் எதற்கென்னில் பிரபஞ்சத்திற்குத் தாரகமாம். அங்ஙனந்தாரகமாக மாயையென வொன்று வேண்டுமோ? முதல்வனிடத்திலே பிரபஞ்சமானது சிலந்தியிடத்து நூல்தோன்றி யொடுங்கினாற் போலவும் தோன்றியொடுங்குமாதலால் முதல்வனது உபாதான மில்லையென்று மாயாவாதி சொல்லில், அசித்தான பிரபஞ்சஞ் சித்தாகிய முதல்வனிடத்துத் தோன்றா பொன்னிற் களிம்பு தோன்றாமையின். மாயை யிப்படி நிலை பெற்றுள்ளதாயின் முதல்வனெற்றுக்கென்று சொல்லில், மாயைசட மாகையால் தானே தனுவாதிகளாய்ப் பொருந்த மாட்டாது. அம்முதல்வனும் இந்த மாயைக் கொண்டன்றி யொன்றை யுண்டாக்கமாட்டான். அங்ஙனமானால் முதல்வன் சத்தியீனனவனென்று சொல்லில், அம்மாயையும் அம்முதல்வன்போல அநாதியே யாதலிற் புதிதாகவொன்றை யுண்டாக்கிக் கொள்ளவேண்டுவ தில்லை. முதல்வன் அம்மாயையை விரியப்பண்ணி யெவற்றையு முண்டாக்குவன். ஆதலாலே கர்த்தவியத்தை அந்தமாயை கொடுத்ததென்று சொல்லப்படாது.

முதல்வன் படைப்பனாயின் இங்ஙனம் படைக்கப்பட்ட பிரபஞ்சத்தை ஒருபடியாகப் படையாமற் பறவை முதலியனவாகப் படைக்க வேண்டியதென்னையென்று உலகாயதன் சொல்லில் ஆன்மாக்கள் முன்செய்த கன்மத்துக்கீடாகவென்று சொல்லலாம். முன்கூடின கன்மமுண்டாயிற் பின்னைக் கருத்தாவெற்றுக்கென்று நிரீச்சுரசாங்கியன் சொல்லில் அக்கன்மஞ்சடம் முதல்வன் அந்தஉடம்புகளைப் படைத்தது முன்னரார்ச்சித்த கன்மபலன்களைப் புசிக்கும் ஆன்மாக்கள் பொருட்டாகும். முன்னார்ச்சித்த கன்மபலத்தை ஒருடம்பிலே நின்றனுபவிப்பது ஆன்மாவாயின் ஆன்மாத்தானே புண்ணியபாவங்களின் முறைமைக்கீடான உடம்பைப் பொருந்துமென்று பின்னுஞ்சொல்லில் சடமான மாயாகாரியத்தின் றிரட்சியும் கருத்தாவாய்த்தானே அறிகைக்கோரறிவுமில்லாத முறைமையினை யுடைய வான்மாவும் பொருந்துதற்கு ஒரு பிரமாணமுமில்லை.

முதல்வன் ஆன்மாக்களுக்குத் துன்பமிகவுண்டாக இவ்வுடல்களைக்கூட்டியது வினைப்பயன்களைப் புசித்தற்காகவோ அங்ஙனமாகுக, இந்தக் கன்மமோ இதுவன்றி மாயையோ ஆன்மாவை முற்பொருட்டுப் பொருந்தியது

என்று சொல்லுஞ்சொல் முன்பே ஒருமலமு மில்லாதாரிடத்தில்பொருந்து மென்றால் உண்டாம் அத்தனையாயின அத்தொடக்கேதெனில், ஆன்மாயென் றன்று அன்றே ஆணவமல முண்டு ஆனால் மாயையுங் கன்மும்பின்பு புளவா னவோவெனில், ஆணவமல முண்டாகவே ஒழிந்த மாயையும் கன்மமும் நெல்லிடத்துண்டான தவிடும் உமியும் அந்நெல்லிற்கு அநாதி சம்பந்த மானாற்போல அநாதியாகச் சொல்வர்.

அசுத்தமாயாகாரியம்.

அசுத்தமாயையிடத்திலே கலை காலம் நியதி வித்தை அராகமாகிய விவையைந்து முளவாகும். கலையிலே மூலப்பிரகிருதி தோன்றி அதினின் முக்குணங்கடோன்றும். குணங்களின் சமம் சித்தமும், எற்றக்குறைச்சல் புத்தியுமாம், புத்தியினின்றும் அகங்காரந்தோன்றும். அகங்காரமானது தைசதவகங்காரம், வைகாரி யகங்காரம், பூதாதி யகங்காரமுமென மூவிதமாம். தைசதவகங்காரத்திலே சாத்துவிககுணத்தைப் பொருந்தின மனமும் ஞானேந்திரியமாகிய சோத்திராதியைந்தும் தோன்றும். வைகாரி யகங்காரத்திலே இராசதகுணத்தைப் பொருந்தின கன்மேந்திரியங்களான வாக்காதி யைந்துந்தோன்றும். பூதாதி யகங்காரத்திலே தாமத குணத்தைப் பொருந்தின தன்மாத்திரைகளாகிய சத்தாதி யைந்துந்தோன்றும். அச்சத்த முதலியதன்மாத்திரையிலே ஆகாய முதலிய வைந்து பூதங்களும் அடைவே தோன்றும்.

கன்மமலம்.

கன்மமலமானது ஆன்மாக்கள் பொருந்தப்படு முடம்பிற்கு ஓர்காரணமாய், நானாவிதமான போகங்களை யுடையதாய், நாசத்தையும் உற்பத்தியையும் பீசாங்குர நியாயமாக உண்டாக்கிவரும். ஆகையினாலே தொன்றுதொட்டுவருவதாய், பலவிதப்படுவதாய், சிருட்டிகாலத்து உடலெடுக்கு மிடத்துச்சூக்குமமாய் ஆன்மாக்கடோறும் செல்வதாய், மனவாக்குக் காயங்களால் உண்டாக்கத்தக்க முறைமை யுடையதாய், திதிகாலத்தில் ஆன்மாக்களுக்குச் சீவிதமாகப் புத்தியை அடைந்திருப்பதாய், இரண்டு பிரயோசனமான சுவர்க்கநரகங்களுண்டாதற்குக் காரணமான புண்ணிய பாவங்களாய், ஒடுங்குங்காலத்தில் அந்தமாயையிலே யொன்று பட்டுப்பொருந்தும்.

சித்தாந்தசரபம்.

(இன்னும்வரும்)

திருக்குறள்.

செய்ந்நன்றியறிதல்.

பிறர் தனக்குச் செய்த உபகாரத்தை மறவாதிருத்தல் என்பது இத்தலைப்பின் பொருளாகும். இவ்வதிகாரம் இனியவை கூறலுக்குப்பின் அமைக்கப்பட்டதென்னையோவெனில் இல்லறத்தின்கண்ணே நின்று விதியாம்விருந்தோம்பலுக்கு இன்றியமையாதுள்ள இன்சொற்களைச் சொல்லுபவரேனும் நன்றிமறப்பரேல் குற்றப்செய்தவர்களாய் இன்சொல் கூறலும பயனற்றதாகப் போய்விடுமாகலின் அத்தகைய இன்சொல்சொல்பவர்களுங்கூட ஜாக்கிரதையாய் நடக்கவேண்டிஇவ்வதிகாரம் இங்கமைக்கப்பட்டது. ஒருவர் காரணமில்லாது செய்யும் நன்றியின் அருமையை விளக்க நாயனார் தமது முதற்குறளில்,

"செய்யாமற் செய்த வுதவிக்கு வையகமும்
வானகமு மாற்ற லரிது" என்றார். இங்கு

"செய்யாமற் செய்த உதவி" என்பது இதற்குமுன்னர் தனக்கு மற்றொருவர் யாதொரு உதவியும் செய்யாதிருக்க (ஆகவே காரணமில்லாமல்) தான் அவர்க்குச் செய்யும் உதவியைக் குறிக்கும் - அப்படி யாதொரு காரணமுமில்லாமல் அதாவது பிரதியுபகாரமாகச்செய்யப்படாதநன்றிக்கு விண்ணுலகத்தையும் மண்ணுலகத்தையும் ஈடாகக்கொடுத்தாலும் போதாதென்பது இக்குறளின் கருத்தாம். இதனைசெய்யாமை செய்தவுதவி எனப் பாடங்கொள்ளுதலுமுண்டு. அப்போது பிரதியுபகாரஞ் செய்யாகூடாமையை அறிந்து செய்த உதவி என்றாகும். பிறகுகாலத்திற்செய்யும் உதவியின் மேன்மையைக்காட்ட.

"காலத்தி னாற்செய்த நன்றி சிறிதெனினு
ஞாலத்தின் மாணப் பெரிது" என்றார். இங்கு

உதவி சிறிதாயினும் ஆபத்துகாலத்திலோ அல்லதுமுக்கியமாக உதவி வேண்டிய காலத்திலோ அவ்வுதவி செய்யப்பட்டமையால் அது பூமியினும் பெரிது என்றார். இதற்கு உதாரணம் வலையிலகப்பட்ட சிங்கத்தை மீட்க சுண்டெலி அவ்வலையைக்கடித்ததே இதைபோந்ததாகும்புராணவுதாரணங்களுமநேகமுள. சரித்திர. பூர்வமாகவேண்டில் உலாந்துதேசம் தண்ணீரால் மூடப்படாதபடி அவ்வூர் அணையினுள்ள ஒரு சிறுதுவாரத்தை தன் சிறு விரலால் இரவெல்லாம் அடைத்துக் கொண்டிருந்த ஓர் சிறிய உலாந்திய பிள்ளையின் சரித்திரமும் ஏற்றதே. பின்னும் பயன்கருதாது நோக்கும் உதவியின் மகிமையை யுணர்த்த,

"பயன்றூக்கார் செய்த வுதவி நயன்றூக்கி
னன்மை கடலிற் பெரிது" என்றார். பயனைக்

கருதாது தான் உதவி செய்யவேண்டுமென்றும், அவ்வுதவி எப்படியாவது பயனையளித்தேவிடும் என்பதை,

"நன்றி யொருவர்க்குச் செய்தக்கா லந்நன்றி
யென்று தருங்கொ லெனவேண்டா—நின்று
தளரா வளர்தெங்கு தாளுண்ட நீரைத்
தலையாலே தான்தருத லால்" என்பதனால்

நன்கறியலாம். பின்னும் பிரதியுபகாரம செய்யக்கூடியவர்கட்கு செய்வதெல்லாம் நன்றியாகாது கடன்போலாகுமென்பதை; நாலடியார் "ஏற்றகை மாற்றாமையென்னுந் தாம்வரையா,தாற்றாதார்க்கீவதாமாண்கட—னாற்றின், மலிகடற் றண்சேர்ப்ப! மாறீவார்க் கீதல், பொலிகட னென்னும் பெயர்த்து" என்பதனாற் காண்க. பின்னும் உபகாரத்தை யடையும்பெரியோர் செய்கின்றது யாதெனின் "தினைத்துணை நன்றிசெயினும் பனைத்துணையாக், கொள்வர் பயன்றெரி வார்" அதாவது செய்யப்பட்ட வுதவி சிறிய அளவினதேயாயினும், அதனால் வரும்பயன் பெரிதாகையால் அவ்வுபகாரத்தை செய்த அளவே கருதாது பயனளவைக் கொண்டு கணிப்பர் பெரியோர் என்பது இக்குறளின் தாற்பரியமாகும். முதன் மூன்று குறளாற் கூறிய மூன்றுவித உபகாரமாகிய செய்யாமல் செய்வது, காலத்திற் செய்வது, பயன் கருதாது செய்வது ஆகிய இம்மூன்றினையும் தொடுத்து நான்காவது மொன்றுளதெனக் காட்ட "உதவி வரைத்தன் றுதவி யுதவி, செய்ப்பட்டார் சால்பின் வரைத்து" இந்நான்காவது தவி யென்னையெனில் உதவியைப்பெற்றுக் கொள்பவரின் தகுதிகேற்க செய்யும் உதவி. செய்யும் உதவிக்கு எல்லை இல்லையென்றும்,அஃதுபெற்று கொள்பவரின் தகுதியின் எல்லையேஎல்லையென்றும் இதனால் காட்டினர். "பாத்திரமறிந்து பிச்சையிடு" என்னும் பழ

மொழி இக்குறளுக்கு ஒருவாறு ஒக்குமெனக் கொள்ளலாம். இன்னும் இம்மைமறுமை உறுதிகளைக் காட்ட "மறவற்க மாசற்றார் கேண்மை துறவற்க துன்பத்துட் டுப்பாயார் நட்பு" இதில் இம்மை யுறுதியாவது "துறவற்க துன்பத்துட் டுப்பாயார் நட்பு" என்பது மறுமை யுறுதியாவது "மறவற்க மாசற்றார் கேண்மை" என்பதே. மாசற்றார் கேண்மை மறுமைக் குறுதியோவெனின் ஆம் என்றே அறநெறிச்சாரம் "இம்மை யடக்கத்தைச் செய்து புகழாக்கி, யும்மை யுயர்கதிக்குய்த்தலான்—மெய்ம்மையே,பட்டாங் கறமுறைக்கும் பண்புடை யாளரே,நட்டா ரெனப்படுவார்"எனக்கூறுகிறது. இன்னும் நன்றி செய்தவரின் நட்புமறக்கற்பாலதன்றுஎன்பதை "எழுமை யெழுபிறப்பு முள்ளுவர், தங்கண் விழுமந் துடைத்தவர் நட்பு" என்பதனால் வற்புறுத்தினர். ஏனெனில் துன்பந்தான் சிநேக சோதனைக்குச் சரியான கருவியாகையால் அச்சோதனைக்கு நின்றவர்களே நண்பர் எனக்கொள்ளப்படல் வேண்டும்.இதைப்பற்றிதான "*A friend in need is a friend indeed*" என்னும் அங்கிலேய முதுமொழி. எழுபிறப்பாவது "ஊர்வ பதினொன்றும் ஒன்பது மானுட நீர்ப்பறவை, நாற்காலோர் பப்பத்தாஞ், சீறிய பந்தமாந்தேவர் பதினாலயன் படைத்த, வந்தமில்சீர்த் தாவரநா லைந்து" ஒவ்வொருவரும் செய்யும் கருமங்களில் மறத்தற்கும் மறவாதிருப்பதற்கு முரியன வினையெனக் காட்ட "நன்றி மறப்பது நன்றன்று நன்றல்ல, தன்றே மறப்பது நன்று" என்றார். ஒருவர் செய்த வுபகாரத்தை மறவாதிருப்பதும் அவர் செய்த தீமையை மறந்து விடுவதுமே பெரியோர் செய்யும் கருமங்களென்பது இக்குறளின் கருத்தாகும். ஆகவே பிறர் செய்ததீமை அல்லது குற்றத்திற்காக ஒருவரை மன்னித்து விடுதல் பெரிதல்லவென்றும், அவர் செய்த தீமை அல்லது குற்றத்தை முற்றும் மறந்து விடுவதே மேலானதென இக்குறளால் குறிப்பாக அறியலாம். நன்றியவை மறப்பதின் பயனை இவ்வதிகாரத்து கடைசி குறளாலறிக. பின்னும் நன்றல்லாதவைகளை மறக்கும் வழிகளில் ஒன்றைக் காட்ட "கொன்றன்ன வின்னா செயினு மவர் செய்த வொன்று நன்றுள்ளக் கெடும்" என்றார். அதாவது தமக்கு முன்னரொரு நன்மை செய்தவர் தனக்கு விரோதமாகி கொலைக்குச் சமானமாகிய தீங்கு செய்தபோதிலும், அவர்கள் முன்னர் செய்த நன்றியின் உணர்ச்சியால் இத்தீங்கு தீங்காகக் காணப்படாமல் மறக்கப்படுகின்றது தீயவைகளை மறப்பதற்கு ஒருவர் செய்த உபகாரத்தை மறவாதிருப்பது ஓர்வழி. கடைசியாக செய்த நன்றியை கெடுத்தலின் கொடுமையைக் காட்ட "எந்நன்றி கொன்றார்க்கு முய்வுண்டா முய்வில்லை செய்ந்நறி கொன்ற மகற்கு" என்றார், மிகவும் அருமையான அறங்களைக் கெடுப்பவர்களும் ஒருக்கால் ஈடேற வழியுண்டு. ஆனால் ஒருவர் செய்த நன்றியை உணராது கெடுப்பவர்கள் ஈடேற மாட்டார்களென்பது பெற்றாம்.மிகவும் அருமையானஅறங்களைக் கெடுப்பவர்களுக்கே ஈடேற வழியில்லை. இதனை புறநானூறு "ஆன்முலை யறுத்த வறனிலோர்க்கு, மாணிழை மகளிர் கருசிதைத் தோர்க்கும், பார்ப்பார்த் தப்பிய கொடுமை யோர்க்கும்,வழுவாய் மருங்கிற் கழுவாயுமுளவென நிலம்புடை பெயர்வ தாயினு மொருவன், செய்தி கொன்றோர்க் குய்தி யில்லென, வறம்பா டிற்றே யாயிழை கணவ" என்பதிற் காணலாம்-இப்பேர்ப்பட்டவர்களுக்கும் உய்வு உண்டென்று சொல்லி, செய்ந்நன்றி கொன்றவனுக்கு உய்வு இல்லை என்றதால் இவர்மேற் சொல்லியபாதகரினும் பாதகராவர் என்பது குறிப்பாகும். வியாசன் கையொப்பநேயரில் சிலர் கேட்டுக்கொண்டபடி இவ்வதிகாரத்து பத்து குறளையும் வரிசையா யெழுதுவாம்.

1. செய்யாமற் செய்த வுதவிக்கு வையகமும்
   வானகமு மாற்ற லரிது
2. காலத்தி னாற்செய்த நன்றி சிறிதெனினு
   ஞாலத்தின் மாணப் பெரிது.
3. பயன்றூக்கார் செய்த வுதவி நயன்றூக்கி
   னன்மை கடலிற் பெரிது
4. தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக்
   கொள்வர் பயன்றெரி வார்
5. உதவி வரைத்தன் றுதவி யுதவி
   செயப்பட்டார் சால்பின் வரைத்து
6. மறவற்க மாசற்றார் கேண்மை துறவற்க
   துன்பத்துட் டுப்பாயார் நட்பு
7. எழுமை யெழுபிறப்பு முள்ளுவர் தங்கண்
   விழுமந் துடைத்தவர் நட்பு
8. நன்றி மறப்பது நன்றன்று நன்றல்ல
   தன்றே மறப்பது நன்று
9. கொன்றன்ன வின்னா செயினு மவர்செய்த
   வொன்றுநன் றுள்ளக் கெடும்
10. எந்நன்றி கொன்றார்க்கு முய்வுண்டா முய்வில்லை
    செய்ந்நன்றி கொன்ற மகற்கு

கோ. மு. சென்னை.

கமலாவதி.

(8ம்—பக்கத்தொடர்ச்சி.)

ஆயிரஞ் சிங்கங்களினது வீரியமுஞ் சாந்தமு மொன்றாகத் திரட்டியது போலும் ஆண்மையும் பொறுமையும் எண்ணாயிர மன்மதர்களைத் திரட்டிய வஜிகரமும் பொருந்தியெனது பூர்வபுண்ணியத்தினா லெனக்கென்று வாய்த்த எனதருமைப் பிராணேசா ! நீவிர் வினாவியவை புண்ணிலே யெய்த வேலைப் போல என்னைவருத்துகிறது. யானும் இதன்முன்னேயே இவ்விஷயத்திற்சிந்தையுற்றவளாய் "—எண்பதுகோடிபல வெண்ணுவன—" என்பதாக "எண்ணாத எண்ணமெல்லா மெண்ணியெண்ணி யேழைநெஞ்சம், புண்ணாகச் செய்ததினி போதும்பராபரமே." என்று மனம்புண்பட்டிருக்க அவ்வியாகூலச் சிந்தையை நம்பால் தெரிவித்தால் நமது இராஜ்ய பரிபாலனச் சிந்தையில் குறைநேரிடுமென்று மின்னும் பலவிதச் சங்கடங்கட்கு மேதுவாகுமெனக் கருதி தெரிவிக்காம லிருந்தேன். ஆயினும் முதுநூலாரா ராய்ச்சிப்படி நம்மிருவருள் யாருக்கேனும் மலடு உண்டோவென்று நம்மிருவரது கழிநீரையும் சோதித்தும், ஜோதிடநூல் விதிப்படி யிருபத்தேழு நக்ஷத்திர நாமங்களுக்குரிய விருபத்தேழு விருட்சங்களில் பலாசு, புன்னை, நாவல், மகிழம், பலா, மா, இலுப்பை, சண்பகம், எருக்கு, வஞ்சி, அரசு, ஆல், மாதுளை, பிராய், முதலாயது பாலுள்ள விருக்ஷங்களாம். மற்றவை, வயிர மென்னப்படும். புருஷரது விருக்ஷங்கள் வயிரமும், மாதரது பாலுள்ளவிருக்ஷமுமானால் புத்திரருண்டு, புருஷரது பாலுள்ளதும் மாதரது வயிரமுமாயின் மலடு, இருவரதும் வயிரமானாற் பின்னுமதிக நலம் என்பதையுஞ்சோதிக்கநம்மிருவருக்கும் மலடில்லையெனக் கண்டேன். எனினும் பூர்வ புண்ணியப்படியே முடி-

யும். அறிவற்ற பத்துபிள்ளைகளைப் பார்க்கிலும் அறிவுள்ள வோர் பிள்ளையைப்பெறுதல்நலம். அறிவிலிகளனைவரைப் பார்க்கிலும் அறிவுள்ளாரொருவரைச் சேர்தலே நலம்"—கோடி கொடுப்பினுங் குடிப்பிறந்தார் தம்மொடு, கூடுதற் கோடி பெறும்—"இதுமாதர்களையும் அடுத்தது. துக்கமானது எல்லாவின்பங்களிலுங் கலந்திருக்கின்றதல்லவா ? மணஞ்செய்துகொண்டு தன்னாயகனிடத்தில் யாதோர் பலனும் அடையாதஅல்லதுகல்யாணமற்றுகாலங்கழிக்கும் பருவமடைந்துள்ள மாதர்கள் சும்மாவிருப்பின்,

" தம்மமர் காதலார் தார்சூழணியகலம்
விம்ம முயங்குந் துணையில்லார்க்—கிம்மெனப்
பெய்ய வெழிலி முழங்குந் திசையெல்லா
நெய்த லறைத்தன்ன நீர்த்து."..................அதாவது

பூமாலை யணிதற்கென்றமைந்த மார்பையுடைய நாயகர்களைப்புணருந்தொழிலில்லாத மாதர்கட்கு மேகஞ்சத்திக்குந் திசையெல்லாமவட்கு சாப்பறையடிப்பதுபோலும் எனச் சாத்திரயுக்தமாகையால் அப்படித் திருமண முடித்த பின்னரும் விசனமே. காரணம் அநந்தமுண்டெனினும், தக்கபடி நடந்து கொள்ளாததே விசேடமேயாம். ஆடவரும் மாதரும் மிக்க காமதுறந்தரராகி மாதர்கள் "—வெண்ணிலவே எத்திக்குங் காய்காய் எட்டிக்காய்—" என்று சந்திரனை யிழித்துக்கூறியும், ஆடவர் " மாரன்வாதையினல் சீரழிந்தேனே-புவியிசை " என்றுமாரனைப் பழித்துக்கூறியும் "—மாதத்திரண்டு விசை மாதரைப்புல்குவது—" என்பதில்லாமல் அளவற்று ஸ்திரீகள் ருதுவானகாலத்திலும், (பெரியோர்களால் நீக்கிவைத்த தாகிய) மாதவிடாயானதுமுதல் நான்குதினங்களும், ஏகாதசி, திரயோதசியாகிய விரண்டு திதிகளும், (பட்சிசாஸ்திரம்) தங்களதுபக்ஷி, துயில், சாவு, இவ்விரண்டு சாமங்களிலும், சந்திரனது பருவகாலங்களிலும், நெடும்பிரயாணஞ் செய்தபிறகும், க்ஷவரஞ்செய்துகொண்டதினமும் எண்ணெயிட்டு ஸ்நானம்செய்த தினமும், இராப்போஜனம்செய்த ஐந்துமணி நேரத்திற்குள் ஆகிய இவையெல்லாம் நீக்கிய தன் பின்னராகிய சுபவேளையில் சம்போகத்தைச் சந்தோஷமாகவும், இருவரும் பிணங்கியுடன் சமாதானம்பெற வின்பத்தோடும்,

" முயங் காக்காற் பாயும் பசலைமற் றாடி
யுயங்காக்கா துப்பின்றாய் காமம்."..............அதாவது

ஆடவரல்லது மாதர் புணராவிட்டால் ஓர்விதத்தேமல் உண்டாகும்; புணருங்கால் ஒருவருக்கொருவர் பிணங்கிப் புணர்வதைவிட இன்பம் இல்லை "-புல்லாப்புலப்ப தோரா று-" என்பது, புணர்ந்தபின் பிணங்குவது ஓர்வித இன்பமாம். என்றால் பிணங்குவது, கோபத்தாலுண்டாவதல்ல " அளவுக்குமிஞ்சிய வமுதம்நஞ்சு " என்பதுபோல ஆசையதிகரிப்பதினல் பிணக்குண்டாவது. இப்படிப்புணர்வதே போகம் என்னப்படும். சாதாரணமாக வேசையருக்குப் பிறக்கும்பிள்ளைகள் அதிகவசந்தரூபமும் உயர்ந்த மதியுமுள்ளவராயிருப்பது கண்கூடன்றோ ! ஏனெனில் இவர்கள் அவ்வாடவரைப் பணம்பறிக்கவும், தான்மணந்த நாயகிமேல்சிந்தைசெலுத்தாதிருக்கவும் மிகவாசையும் சந்தோஷத்தையுங் காட்டிப் புணருவதினல்தான்.

அளவற்று சம்போகித்து " அச்சமுள்ளடக்கி யறிவகத்தில்லாக்கொச்சைமக்களைப் பெறுதலின்—" என அறிவாண்மையற்ற பிள்ளைகளைப்பெற்று தங்கள் குடிக்கீனத்தை வருவித்துக் கொள்ளுகின்றனர் " நாப்பிளக்கப் பொய்யுரைத்து நவநிதியந்தேடி, நலமொன்று மறியாத நாரியரைக்கூடி—"என்று

விஷயமறியாமலே சம்போகம் என்றால் மெத்த ஆசையாகி எத்தனையோ பாலியர்கள் இராக்காலங்களில் காடு, செடி, முட்கள், இருட்டென்றும் பாராமல் அச்சமின்றியோடித்திரிந்து நமதிராச்சேகவ ரண்டைத்திருட ரெனப்பிடிபட்டுபல்வித சிட்சை யடைந்திருக்கின்றனர் எனச் சொல்லிவந்த அரசியைத் தடுத்து சவுந்தர கேசரிசொல்வான்.

ஆமாம் எனதாசைக்கிசைந்த மின்னற்கொடிபோலும் இடையுடைய வென்னருமை நாயகியெனக்கு மொன்று ஞாபகம் வந்தது.

மதிநாசனபுரமென்னுமோர் கிராமத்தில் வேளாள னொருவன் சிறிது தனவந்தனாயிருந்து சிலகாணிகள் தன்னுடைய ஸ்வாதினமா யிருக்கமற்றவர்கட்கு வாடகையாகவிட்டு ஜீவித்துவந்தான். இவனுக்கு ஒரேகுமார னிருந்தான். அப்பாலியன் திடகாத்திரமுள்ள பலசாலியேயானாலும், கல்வியென்பதின் வாசனையே அறியாதவனும் அறிவற்று பேதையுமா யிருந்தா னதலாலிவன் அவ்வந்நேரங்களில் வயிறுபுடைக்கச் சாப்பிடுவதும், மண்கல்லென்றும் பாராமல் படுத்துறங்குவதும், இவனண்டை கும்பகர்னனும் தோற்றுப்போவானென்று நிட்சயிக்கத் தகுந்தவனு மாயிருந்தான். ஆனால் இரண்டொரு நேசரொழிய மற்றவர்களண்டைப் பேசவும்விளையாடவுமாட்டான். உண்பதுமுறங்குவதுமே பெரியவேலை, யிதுவே இவனுக்கு ஆழ்ந்த சிந்தனை. இதுவே விசனமான எண்ணம் அதாவது சாப்பிட்டவுடன நித்திரைக்கான விடத்திற்குப்போக வேண்டுமானால் நான்படுத்திருந்த இடத்தண்டையே சாப்பாட்டைக்கொண்டுவந்து கொடுத்து விடப்படாதா என்பான்; படுத்திருக்கும்போது சாப்பிடும்படி அழைத்தால்—த்—த்—த்—ஏ இதென்னையா பெரிய இழவாபோச்சு என்பான் மூத்தாளுக்கு அண்ணனாயிருந்தான். இவன்பெயர் காத்தராயன். இவனைக் காண்பவர்கள். எப்படியப்பா க்ஷேமம், கல்யாணம் ஆய்விட்டதா? எப்போகல்யாணம்? என்று விசாரிப்பதினால், இவன் தனதுநேயரை யோர்நாள் அடே அண்ணே அண்ணே கல்யாணமென்றாலென்னவென்று வினவினான் அதற்கவர்கள் மாறுத்தரமாக அது இப்போது தெரியவராதடா கல்யாணஞ் செய்துகொண்டாலே அதனருமை தெரியு மென்று சொல்லித் தங்களுக்குள்ளே ஏதுபையனுக்கு புத்திவந்துவிட்டது இனிமேல் சும்மா விருக்கப்படாது இவனது தந்தையிடந் தெரிவித்தலே நன்மையெனப் பேசிக்கொண்டு அப்படியே தெரிவித்த விவகாரங்களைச் சொன்னார்கள். கேள்வியுற்ற அவன் தந்தை மிகவுஞ் சந்தோஷித்தவனாகி யிவனுக்குப் பெண்ணொன்றுபேசி சகலவைபவங்களுடனுந் திருமணமுடித்தான். மணமுஞ் சுமங்கலமாய் நிறைவேறியது. மூன்றாம்நாள்மணப்பெண்ணோடு தனதுமாமியார் வீட்டுக்கு மருவுக்குச்சென்றான். அன்றே மருவுதற்கு சுபவோரை யெனக் கணிக்கப்பட்டிருதந்தால்,மணநாயகன் நாயகியிருவரையும்அலங்கரிக்கப்பட்டிருந்த வோரறையில் அன்றி ராப்போதில் செய்வனயாவுஞ் செய்து உள்ளே விட்டுக் கதவடைத்தார்கள். ஆனாலிவன் கும்பகர்னனுக் கண்ணனென்று அறியாமற்போனார்கள். பொழுதும் விடிந்தது. அந்தோ இவனை எழுப்புதற்கு இரண்டு கட்டைப்பாறைகளும் அக்கட்டைப் பாறைகளைப்போலவே நாலு ஆட்களுந்தேவையாயிருந்தன. அப்படியு மிப்படியுமாகவிடிந்துபத்துநாழிகைக்குள்ளாகவே எழுந்து கொண்டான். சிலர் மணமயக்கமோ என்று பேசிக்கொண்டனர்; சிலர் பிணமோ என்றனர் சிலஸ்திரீகள் என்னடியம்மா இப்படித்தூங்குறானே என்றிடித்துப்பேசினர். அதற்குப்பதிலாகச் சிலர் கஷ்டம் ஜாஸ்திஎன்றனர். உண்மையில் எதுவுமே யல்லாமலிருந்தது.

பெண்ணைத்தனியே அழைத்துப்போயினர் சிலர். என்ன குழந்தாய் என்ன விசேஷம்? என்றனர் சிலர். கூச்சமென்ன சொல்லடியம்மா என்றனள் ஓர் மூதாட்டி. ஏனடிகுழந்தாய் சொல்லடி அதற்கென்ன யாருக்கும் அடுத்தது தானே நீமாத்திரமா அதிசயமாய் மாப்பிள்ளைப் பக்கத்தில் படுத்துக் கொண்டாய் என்றனள். தாயார் இருங்க ளிருங்கள் குழந்தையை அலட்ட வேண்டாம் தனியாய்க்கேட்டால் சொல்லுவாள் எல்லாரும் வெளியே போங்கள் விச்சாரிப்போம் என்றனள். இவ்வளவும் இவளுக்குத் தன்னைப் பரிகசிப்பது போலிருந்தது. இப்படியே நாலைந்து தினங்கள் கடந்தும் இவர்கள்சம்பந்தப் பட்டவர்களல்ல ஆகையால் இவனென்ன பேடியோ என்றனர் சிலர்; அவளென்ன ஆண்பிறப்போ இவனைச் சேர்க்காளோ என்றனர் சிலர். கடைசியி லிவர்களேது மறிந்திலாரெனக் கண்டு இவர்களுக்குத் தனித்தனி மர்மங்களைச் சொல்லினர். ஆறுந்தினமிரவு இருவரும் சுகபோகிகளாய் நித்திரித்தெழுந்தனர் முன்பலவாறு ஒய்யாரஞ் பேசினவர்கள் கேட்டடங்கினர்.

புருஷனாகிய நமக்கிவள் பெண்டாட்டி தானேயென்றிவளை அடீ பெண்டாட்டியென்றே யழைப்பான். "அனல்கண்ட பூனையடுப்பங் கரையை விட்டகலுமா" என்பதாக அன்றைக் கொல்லாமவளைவிட்டு அப்பக்க மிப்பக்க மசைந்தவனல்ல. அன்றைப்பகல் இவர்களும் மற்றுளோரும்போஜனமுண்டு தாம்பூலந்தரித்து மணப்பெண் தன்னாயகனை யவ்வறையிலேயே யிருத்தி தானுந்தன்தாயார் மற்றுமுளோர் சூழ்ந்திருக்கப் பேசிக்கொண் டிருக்கையில், அந்தமணநாயகன் மெத்த அவசரத்துடன் அடீபெண்டாட்டி ! அடீபெண்டாட்டி ! எனக் கூக்குரலிட்டோடி வந்தான். அனைவரும் என்னமோ ஏதோவென்று துடித்து எழுந்திருந்தார்கள். இவன் சிறித்துக் கொண்டு வருகின்றையா நாம் ராத்திரிசெய்தோமே அம்மாதிரி செய்யலாம் என்றனன். அனைவரும் தலைக்கவிழ்ந்து நாணத்துடன் வெளியேசென்று விட்டனர். இவனுமவளை விடாதுபற்றி யிழுத்துவந்து தனதுகாமவிடா யாற்றினான். பின்னர் சில ஆடவரைக்கொண்டு அவனுக்கு புத்திகள் போதித்தனர். எனினுமிவ் வறிவிலி மிகுந்தகாமதூர்த்தனாகி இரவும் பகலும் புணர்பவனாகி தன்னுடைய பிதாவிறந்த பின்னுமவனது தனங்களை விலைமாதருக்கென்றும் குடிக்கென்றுஞ் சிலவிட்டு வறியனாகி, மனிதர்களுங் கிட்டே நெருங்கக் கூடாத நாற்றமுடைய வியாதியுடையவனாகிப் பலராலு மிகழ்ந்து இறந்து போனான். இவனது மனைவியு மப்படியே இறந்தாள். இவனதிரண்டு பிள்ளைகளும் நிர்வாகப் பலத்தினராய் மேகரோகங்கள் படிந்த தேகத்தராய் தெருக்களில் திரிய நாளைக்குமந்தபதிக்குச் சென்றால் காணலாம். எனவரசன் சொல்லக் கேட்ட நாயகிமிகவுங் களிகூர்ந்தவளாகிப் பின்னுஞ் சொல்லுவாள்.

(தொடரும்) பா. முனிஸ்வாமி.

த ரு ம ம்.

பெரியோர்களால் சொல்லப்பட்ட தருமம் அர்த்தம், காமங்களுள் அர்த்த காமங்கள் இம்மைப் பயனையன்றித் தருமம்போல் இம்மை மறுமை வீடு என்னும் மூன்றினையும் கொடாமையால் அர்த்த காமங்களைப் பார்க்கினுந் தருமம் வலிமை யுடைத்தென்பதாம். ஆதலால் ஆன்மாக்களுக்குத் தருமத்தைப் பார்க்கிலும் மேற்பட்டதொரு செல்வம் வேறில்லை. நமது சரீரம்இளமை அழகு செல்வம் வீடு வாசல் தோட்டம் துரவுநகை பிள்ளை பெண்டு சுற்றம் முதலியவற்றில் எதுவும் நமக்குச் சொந்தமாவதில்லை. ஆதலால்

அவை நம்முடன்வாரா, நாம் செய்யும் புண்ணிய பாவங்களே நமக்குச் சொந்தமானவை. ஆதலால் அவை நம்முடன்வரும். நம்முடன் வரும் அவ்விரண்டில் தருமஞ் செய்தலாலுண்டாகும் புண்ணியம், நன்மையைக் கொடுத்தலால் அதையே செய்யவேண்டும்; அதருமத்தாலுண்டாகும் பாவம் தீமையைப் பயத்தலால் அதைச் செய்யாமல் ஒழிக்கவேண்டும். நாமிப்போதுஇளமைப்பருவம் உடையோம் ஆகலின் தருமஞ் செய்தற்குக் காலம்இதுவன்று. இறக்குங்காலமாகிய முதுமைப் பருவத்தில் செய்வோம் என நினையாது நாடோறுஞ் செய்தல் வேண்டும். இக்கணத்தி லிருக்கும் சரீரம் இனிவருங்கணத்தில் இருப்பது நிச்சயமன்று, ஆகலின் நிலையில்லாச் சரீரம் நிலையுடையதாயிருக்கும்போதே அழிவில்லாமல் என்றும் நிலையாயுள்ள தருமத்தையொருதலையாய்ச் செய்யவேண்டும். இதுபற்றியே "பேசாவண்ணம் நாவை யுள்ளேயடக்கி, விக்குள் மேலெழுதற்கு முன்னமே மோட்சத்திற்கேதுவான தருமத்தைச் செய்யத்தகும்" என்னும் பொருளைக்கொடுக்கும் "நாச்செற்று விக்குள் மேல் வாராமுன் நல்வினை, மேற்சென்று செய்யப் படும்" என நாயனாரும் உரைத்தனர்.

தருமங்களில் விதிவிலக்குகளை யுணர்ந்து விலக்கப்பட்ட பொய், கொலை, களவு, வியபிசாரம், பொறாமை, கடுஞ்சொல், வஞ்சகமுதலிய தீமைகளையொழித்து, சத்தியம், தயை, பொறுமை, சாந்தம், இன்சொல், வைராக்கிய முதலிய நன்மைகளைக் கைக்கொண்டு செய்வதே சிறந்ததருமமாம். மனத்தின்கண் தீயகுணங்கள் என்னும் அழுக்கில்லாமல் சுத்தமாயிருத்தலே சிறந்த தருமமெனவும், அஃதொழித்த சொல்லும் வேடமும் தருமமல்லவெனவும் அறிவிற் சிறந்த முதியோர் கூறியிருக்கின்றனர். தருமவழியே நடந்து அதனால் வரும் சுகமே சுகமாம். அதனை யொழித்து அதரும வழியே நடந்து அதனால்வரும் சுகம் சுகமன்று. விட்டிற் பூச்சிவிளக்கினிடத்தில்விழும்போது அதற்கு அப்போது சுகமாய்த் தோற்றினும் பின் விழுந்து துன்புற்றுப் பிராணனை யிழக்கின்றது. விஷயங் கலந்த தேன் அருந்தும்போது இனிமையா யிருக்கினும் பின் அருந்தினவனைக் கொல்லுகின்றது. ஆதலால் ஆரம்பத்திலுண்டாகுஞ் சுகத்தைப் பாராமல் பின்பும் சுகங் கொடுக்குமா கொடாதா வென்றுபார்த்து, பின் சுகங் கொடுக்குமானால் அதையே செய்தல் வேண்டும். தருமத்தின் பயன் இப்படிப்பட்டதென்று வேதாகம ஸ்மிருதி புராணாதிகளைக் கொண்டு அறிவிக்கவேண்டுவதில்லை. பல்லக்குச் சுமப்பவனிடத்திலும் ஏறிச் செல்லுபவனிடத்திலுமே பிரத்தியட்சமாய்க்காணலாம். ஏறிச்செல்பவன் சென்மாந்திரங்களில் தருமஞ்செய்தான்என்பதையும், சுமப்பவன் தருமஞ் செய்யவில்லை யென்பதையுங் காட்டுகின்றது. தருமமாவது மனோதருமம் வாக்குத்தரும் காயதருமமென மூவகைப்படும். அவற்றில் மனோதருமமாவது சத்தியம், ஜீவகாருணியம், பொறுமை, நடுநிலைமை முதலியன. வாக்குத்தருமமாவது உண்மைபேசுதல், இனியவைகூறல் புறங்கூறாமை, கோட்சொல்லாமை, கடவுளைத்தோத்திரஞ் செய்தல், மந்திரங்களைச் செபித்தல் முதலியன. சரீரதருமமாவது துன்பஞ்செய்யாமை, உபகாரஞ்செய்தல், ஈகை, பெரியாரைப்பணிதல், தவம், ஈசனைத்தொழுதல் முதலியனவாம். இந்தத்திரிகரணங்களாலும் எப்போதும் தருமஞ் செய்யவேண்டும். எந்தெந்தச்சமயத்தில் எந்தெந்தக் காரணத்தால் எந்தெந்தவிதமான தருமஞ்செய்ய நேரிடுகின்றதோ, அந்தந்தச் சமயத்தில் அந்தந்தக் காரணத்தால் அந்தந்தவிதமான தருமஞ் செய்யவேண்டும். பொருள் ஒன்றையே கொடுக்க வேண்டு

மென்றால் அது எப்போதும் எல்லாருக்குமே சாத்தியப்படாது. திரிகரணங்களாலுஞ் செய்யுந் தருமம் எப்போதுஞ் சாத்தியமாகும். தருமமாவது காமியம் என்றும் நிஷ்காமியம் என்று மிருவகைப்படும். காமியமாவது சொர்க்காதிபதவிகளைக் கருதிச்செய்தல்; நிஷ்காமியமாவது ஆன்மஞானத்தினிமித்தம் பயனைக்கருதாது செய்தல். இதுகாரணமாகத்தான் நம்மவர் யாருக்காவது ஒன்றைக் கொடுக்கும்போது கிருஷ்ணார்ப்பணம் என்றும் சிவார்ப்பணம் என்றுஞ் சொல்லுகின்றனர். தருமமாவது ஒவ்வொருகாலத்தில் ஒவ்வொன்று சிறப்பாயும் முக்கியமாயும் அதிக பயனுள்ளதாயு மிருக்கும். அப்படியே இக்காலத்தில் சிறப்பாயும் முக்கியமாயும் அதிக பயனுள்ளதாயு மிருக்குந் தருமங்களாவன: தேசாபிமானமுடையவர்களாய்ப் பிராணனைத் துரும்பாய் நினைத்து ஜனங்களுடைய க்ஷேமத்திற்காக அதிலும், பார்க்கப் பரிதாபப்படத்தக்க (உண்டும் உண்ணாமலும் காலங்கழிக்கும்) மிகு ஏழைஜனங்களின் சுகத்திற்காக வுழைத்துப் பாடுபடுதலும், அதுவிஷயமாகப் பிரசங்கஞ் செய்தலும், புத்தகம் பத்திரிகை லகுலேகம் இவற்றைப் பிரசுரஞ் செய்தலும், செய்வித்தலும், சபைகளையுண்டாக்கலும், மதாபிமானத்தால் ஆரியமதத்தை அபிவிருத்திசெய்து ஆரியமதத்தைத் தாக்கவரும் கிறிஸ்து முதலிய பாஹ்யமதங்களை நியாயநெறியே நின்று கண்டனைசெய்தலும், நிலையில்லாச் சிற்றின்பத்தி னிமித்தம் புறமதங்களுக்கு விவேகமின்றிச் சென்று பதிதராவோர்க்குப் புறமதங்களின் குற்றங்களை யெடுத்துக்கூறிச் சற்புத்தி புகன்று தடுத்தலும், அதனிமித்தம் தமக்கு மிகுதியுள்ள பொருள் காலம் புத்தி யிவற்றை தருமமாகச் செலவிடுதலும், ஏழைச்சனங்களுக்குக் கல்விச்சாலை வைத்துக் கல்விகற்பித்து மதசித்தாந்தங்களைப்போதித்தலும் முதலியனவாம்.

ஆன்மாக்களுக்கு இம்மை மறுமையிலும் உறுதி பயப்பிப்பது தருமம்; தருமத்தாலுண்டாவது ஈஸ்வரபத்தி; ஈஸ்வரபத்தியைப்பற்றிச் சொல்வது மதம்; மதங்கள் பலவற்றினுள்ளும் அவரவர் புத்தி சரீர தாரதம்மியங்களை அநுசரித்துப் பல பிரகாரமாகச் சொல்லுவது இந்துமதம்; அதிலும் மதங்களெல்லாவற்றினுள்ளும் சிறந்ததும் பூர்வீகமானதும் யுக்தி அநுபவங்கட்கொத்ததுமானது ஷெ இந்து மதமேயாம். இப்படிப்பட்ட மதத்தை நெடுங்காலமாய் அநுசரித்து நற்கதி அடைந்துவரும் இந்துக்களுக்குத் துர்ப்போதனைசெய்து அதிலும் வயிற்றின் பிழைப்புக்காகப் படிக்கப்போன சுயமதசித்தாந்தமறியாச் சிறுபிள்ளைகளை யேமாற்றி நியாயமில்லாத தம்மதத்திற் சேர்ப்பது மிகு அநியாயமாதலால் அம்மதத்தில் இந்துக்கள் போகாதவாறு தடுத்தல் செய்வது இக்காலத்துக்கு மிகச் சிறந்தருமமாம். இதை யொவ்வொரு இந்துபரோபகாரிகளும் கவனித்துச் செய்தல் வேண்டும். நம்மவர் தருமஞ்செய்யாமற் போகவில்லை. அத்தருமங்களெல்லாவற்றுள்ளும் இது சிறந்த தருமமாகலின் அதைக் கடைப்பிடித்துச் செய்யவேண்டும். இவ்விஷயத்தை வெகுபேர் கவனியாமல் வேறு தருமங்கள் செய்கின்றார்கள். நமது மதமே போய்விடுமானால் பின்பு மதவிஷயமான தருமங்கள் எப்படிச் செய்யக்கூடும்? நமது மதத்தை நிலைப்படுத்திக்கொண்ட பிறகன்றோ மற்றைய தருமங்கள் செய்யவேண்டும்!

“ ஒல்லும் வகையால் அறவினை யோவாதே
செல்லும்வா யெல்லாஞ் செயல்.” (குறள்.)

உபகாரப்பிரியன்

இந்துதேயப்பெண்கள்.

உலகசாஸ்திரப்படி பூமியானது இரண்டு பாகமாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. இரண்டுபாகத்திலும் ஐந்துகண்டங்களுள்ளன. அவைகள், ஆசியாகண்டம், ஐரோப்பாகண்டம், அமரிக்காகண்டம், ஆப்ரிக்காகண்டம், ஆஸ்ற்றிரேலியாகண்டம், என அழைக்கப்பட்டு வருகின்றது. ஒவ்வொரு கண்டங்களும் அநேகதேயங்களை ஆபரணமாகப் பெற்றுள்ளது. நாம்வசிக்கும் கண்டத்திற்கு ஆசியாகண்டமென்று பெயர். இக்கண்டத்தில் பற்பல தேசங்களிருப்பினும் மேம்பாடும், நாகரிகமும், அநுகூலமுமான பற்பல நன்மைகளும் ராஜவிசுவாசமும் நிரம்பப்பெற்ற தேயம் இவ்விந்து தேயமேயாம். இத்தேயம் இமயமலையை வடஎல்லையாகவும் மற்றமூன்று பக்கங்களும் ஜலத்தால் சூழப்பட்டதாகவுமுளது. இந்நாடு செழுமையுள்ள நாடென்பதற் கையமில்லை. ஆகையால்தான் பலதேயத்தரசர்கள் இதன்மீது கண்ணோக்கமா யிருக்கிறார்கள். இத்தகைய சுவர்ணமான நமது தேயத்தில் ஜாதிபேத மொன்று தான் தளர்ச்சியுண்டாக்குகிறது. அற்றேல் இந்நாடு இப்போதும் தமிழரசாட்சியின் கீழிருக்குமென்ப தற்கையமில்லை. நந்தேயத்துப் பெண்கள் பிரம்ம, க்ஷத்திரிய, வைசிய, சூத்திரரென்னும் நால்வகை சாதியாருள் ஒவ்வொருஜாதிப்பெண்களும் தத்தம் ஜாதிபுருடர்களுக்கு பெரும்பாலும் அடிமைகளாகவிருக்கிறார்கள். துலுக்கர் அரசாண்ட காலத்துக்குமுன்னால் பெண்கள்பஹிரங்கமாக போகவும் வரவும் சுதந்தரம் பாராட்டி வந்தார்கள். ஆதியில் சங்கமிருந்த காலத்து அச்சங்கத்தில் பெண்பால்களும் அங்கங்களாக விருந்துள்ளார். இதனால் ஆதியில் பெண்பிள்ளைகளும் படித்த வர்களா யிருந்தார்கள் என்பது ஏற்படுகின்றது. மூதாட்டியாகிய ஒளவையாரும் போந்த சாட்சியாம். பின்னர் துலுக்கர் அரசாட்சியில் தங்கள் பெண்டுகளை அந்தப் புரப்படுத்தி யேனைய பெண்டுகளை அக்கிரமஞ்செய்து வந்தமையால் மராட்டி யரசபுத்திரஜாதியார் தங்கள் பெண்டுகளையும் அந்தப்புரப் படுத்தினார்கள். இவ்வழக்கத்தை மற்றஜாதியாரும் கையாடத் தலைப்பட்டார்கள். தலைப்படவே பெண்டுகளுடைய சுதந்தரம் நாளாவர்த்தியில் அடங்கி பெண்கள்கூட்டிலிட்டபுலியைப்போ லானார்கள். ஓர் ஊரிலிருந்து மற்றோரூருக்குப் போதல் அரிது. அப்படிபோவதாயின் வண்டிக்கு நாலு பக்கத்திலுந்திரைகள் போட்டுபெண்டுகளைக் கொண்டுபோவார்கள் இப்பெண்கள் நினைத்துக்கொள்வது "ஐயோ, நாம் என்ன பாவம்செய்தோமோ, புருஷர்களைப்போல் பல ஊர்களையும் தேசங்களையும் அவற்றிலுள்ள பலகாட்சிகளையும் பார்க்கக்கொடுத்து வைக்க வில்லையே, நமக்கு என்ன ஆஸ்திபாஸ்தி நிலநீர் ஆடையாபரணமிருந்தும் இன்னும் பலவித சம்பத்துகளிருந்தும் இப்பேர்ப்பட்ட நிர்ப்பாக்கியமான நிலையிலிருக்கின்றோமே என்று பலவாறு பிரலாபிப்பார்கள். இவ்வழக்கம்நெடுநாளாய் நடந்தேறிவர கடைசியாக வெள்ளைக்கார அரசாட்சி வந்த பின்னிட்டு அவர்கள் பெண்கள் புருஷருடன் பகிரங்கமாய் வண்டியில் உல்லாசமாய் சவாரிசெய்து உலாவுவதைக் கண்டும் இன்னும் புருஷருக்கு மேம்பாடான சுதந்தரம் வெள்ளைக்கார ஸ்திரீகள் அனுபவிப்பதைக் கண்ணாரக் கண்ட இந்துக்கள் கொஞ்சங் கொஞ்சமாய் முன்வழக்கத்தைக் கழித்து இப்போது தங்கள் பெண்களைப் பாடசாலைக்கு அனுப்பி கல்விகற்பிக்கத்துணிந்தார்கள். இத்துணிவு சுமார் முப்பது வருஷகாலமாய் நடந்தேறி வருகின்றது. இப்போது இருப்புப் பாதைகளில் பிரயாணமும் செய்கின்றார்கள். ஆகிலும் வெள்ளைக்கார ஸ்திரீகளுக்கு இருக்கும் சுதந்தரமில்லை. இதுவும் நாளா

வர்த்தியில் கைவல்லியப் படுமென்று நினைக்கிறோம். இன்னும் சிலர் பழயவழக்கத்தை அனுசரித்து தங்கள் பெண்களை பாடசாலைகளுக்கு அனுப்பாமல், என்ன, என்பெண் படித்து பி. ஏ. எப். ஏ-பாஸ் பண்ணி சம்பாதிக்கப்போகிறது? என்னமாயிருந்தாலும் கரித்துணியும் சட்டியுமாய்த் தானே இருக்க வேண்டும், இதற்கு அத்தனை ரங்கி என்ன போவென்கிறார்கள். சிலர் எழுத்தறகற்பினும் பெண்புத்தி பின்புத்திதானே யென்கிறார்கள். கல்வி கற்றால் உலகவியாபாரமும் குடும்ப வியாபாரமும் பதிலட்சணமும் அறிந்து புத்திசாலித்தனமாய் இவ்வுலகத்திலிருக்கும் பரியந்தம் சந்தோஷமாய் காலங்கழிக்கலாமல்லவா ? மேற்கூறிய பெருப்பேற்றை யடையும்பொருட்டு பெண்களுக்கு பிள்ளைபோலவே கல்விகற்பிக்கத் தொடங்கும் நல்லறிவாளர் [illegible]த்தியைப் புல்லறிவாளர் கெடுக்கப் புகுகின்றனர். இவர்கள் செய்யும் ஆற்றலை மாற்றுதலவசியமாம்.

இக்காலத் திவ்வாறிருக்கின் [illegible] பெண் சிசுவதைகள் சிலஇடங்களில் நடந்தேறிவந்தன. வடஇந்தியாவில் அநேகநாடுகளில் பெண்வங்கிஷம் அற்றுப்போயிருந்தது. காரணம் பெண்பிள்ளைகள் பிறப்பது குடும்பத்திற்குத் துன்பமென்றெண்ணிப் பெற்றோர் வெறுப்புற்று அவைகளை மிருதியாய் நாசம்பண்ணினார்கள். இவ்வறிவீனச் செய்கையால் அநேக நாடுகளில் பெண்வங்கிஷம் அற்றுப்போயிருந்தது. உலகத்தில் எங்கே பார்த்தாலும், ஐந்தாறு வயதாகும்போது ஆண்களைவிட பெண்களே அதிகமாயிருக்கிறார்கள் என்பது எல்லாருக்கும் பரபோதமான சத்தியம். இது தெய்வநியமிப்பு. ஆகையால் எங்கேயாவது பெண்கள் குறைந்திருக்கக் கண்டால், அங்கேபெண்பாலுக்கு சேதம் வருவித்திருக்கவேண்டும் என்று நிதானிக்கலாம். பெண்களை விவாகம் செய்துகொடுப்பதில் நேரிடும் செலவு அதிகமானபடியால், தந்தைகள் அப்படி கஷ்டப்படுவதைத் தவிர்க்க இக்கொடிய கிரியை நிறைவேற்றிவந்தார்கள். இத்தீய செய்கை இப்போது ஏறக்குறைய ஒழிந்துபோயிற்று.

இதுவுந் தவிர வேறு வகையான சிசு வதையும் வியாபித்திருந்தது. அது என்னவென்றால் உபத்திரவ காலத்தில் தெய்வத்திற்குப் பிள்ளைகளை நேர்ச்சைசெய்து, காடுகளிலோ பரிசுத்த நதியோரங்களிலோ அவைகளை எறிந்து, இப்படி மார்க்க விஷயமாகப்பிள்ளைகளைக்கொன்றுவந்தார்கள். எத்தனையோ ஆயிரக்கணக்கான மாதர்கள் தங்கள் அருமைப் பிள்ளைகளை குரூரமான கொலைக்குச் சொல்லிமுடியாத வியாகுலத்தோடு ஒப்புவித்தார்கள். இந்தக் குரூரவழக்கத்தால் இந்தியாவில் விளைந்த நிர்ப்பந்தத்தை யார் விபரித்துக் காட்டக்கூடும் ? இங்லீஷ் துரைத்தனத்தார் இத்தீமைகளை நிறுத்தி ஒழித்தது சுகிர்தமே.

இதைப்போன்ற இன்னொரு நிஷ்டூரமும் நிறுத்தலானது. அதாவது உடன்கட்டை யேறுதல். முற்காலத்தில் இந்துக்கள் இறந்துபோனவனுடைய மனைவியைக் கொன்றுபோடுவது மாத்திரமல்ல, அவளை மகாகொடூர வதைசெய்து கொன்றார்கள். எப்படி என்றால் அவளை ஜீவனோடே தன் பர்த்தாவின் பிரேதத்தோடு வைத்து தகனித்தார்கள். இதுவும் கொலைபாதகங்களில் ஒன்றுதான். அறிவின்மையால் இவைகள் நடந்தன.

இந்தியாவின் ஸ்திரீகள் தற்காலத்திலும் அநேக தீமைகளை அனுபவித்துக்கஷ்டப்படுகிறார்கள். அவைகளை எல்லாம் சீக்கிரம் நிவிர்த்திக்க வேண்டி

யது அத்தியந்த அவசரம். அவைகளில் ஒன்று விதவைகள் படுகிற கஷ்டம். விதவைகளை நிர்ப்பந்தமாய் நடத்துகிற விஷயம் யாவருக்கும் நன்றாய்த் தெரியும். ஆகையால் அதைப்பற்றி இங்கே விவரிக்கத் தேவையில்லை. இத்தேசத்தார் அவர்களைக் குணக்கேடாயும் குரூரமாயும் நடத்துகிறார்கள். இப்படிச் செய்கிறதற்குப் பதிலாக, புருஷனை இழந்து கிலேசப்பட்டுத், துக்கசாகரத்தில் மூழ்கியிருக்கும் ஸ்திரீகளை எவ்வளவோ அருமையாயும் உருக்கமாயும் நடத்தி, நாகரிகம் பெற்ற தேசத்தார் செய்துவருகிறபடி விதவைகள் புனர் விவாகம் புரிய உற்சாகப்படுத்தி, அவர்களுக்கு உதவி செய்ய வேண்டியது. இப்போது இந்தியாவில் பல இடங்களில் செல்வாக்குள்ள இந்துக்களில் சிலர் புனர்விவாகம் நடத்தி வருகிறார்கள். ஆயினும் அவ்வளவாய் இதை அங்கீகரிக்கவில்லை.

தங்கள் பிள்ளைகளைப் பாலியத்தில்தானே கலியாணம் பண்ணிவைத்தல் மற்றொரு தீமை. இதுவே முன்சொன்ன தீமைக்கு முக்கிய காரணம். பாலிய வயதில் கலியாணம் செய்த பிள்ளை இறந்துபோனால், பெண்ணை விதவையாகவே ஜீவகாலம் முழுதும் நடத்துகிறார்கள். இதனால் விபசாரம்உண்டாகிறது. பாலியவிவாகத்தால் பெலனற்றவளாயும் தகுந்த புத்தியும் அநுபோக சத்தியும் இல்லாதவளாயுமிருப்பார்கள். சிறு வயதில் பிள்ளை பெறப் பக்குவம் அற்றிருப்பாள். பிள்ளைப் பெற்றாலும் தேக சௌக்கியம் அதினால் குன்றிப்போகும். அவளும் பேதையாயிருக்கிறபடியால், வீட்டுக் காரியம் நடத்தும் திராணி குறைந்திருப்பாள் ஆகவே மாமியாரின் விசாரணைக்குக் கீழ்வைக்கப்பட்டு, அவளிடத்திலிருந்து பட்சக்கேடும் குரூரமும் ஒடுக்கமும் அனுபவிக்கிறாள். எப்படிப் பார்த்தாலும், பாலியத்தில் விவாகஞ் செய்தல் தீமையும், இந்தியாவுக்கு ஓர் இலச்சையான காரியமுமாய் இருக்கிறது. புத்தியுள்ள சிலர் இவ்வழக்கத்தை அழிக்கப் பிரயாசைப்படுகிறார்கள். பெண்சிசுவதையையும், உடன்கட்டையேறுதலையும் மகா சிறுபிள்ளைவிவாகத்தைத் தடுத்து, புனர் விவாகத்தை உற்சாகப்படுத்தி ஸ்தாபிக்கப் பரிசிரமப்படுகிறார்கள் சிலர். ஆகையால் இனி வருகிற சந்ததியார் இப்போதிருக்கிறவர்களை விட அநேக சிலாக்கிய பாக்கியங்கள் அநுபவிப்பார்கள் என்று நிதானிக்கலாம். பெண்கள் படிப்பதினால் கெடுதியுண்டாகும் என சிலர் தப்பெண்ணம் வகித்திருக்கிறார்கள். இத்தகையாளருக்கு எவ்வள வெடுத்துரைத்தும் மனந்திரும்பினார்களில்லை. நற்குலப் பெண்கள் எவ்வளவுபடித்தாலும் அடக்கமாகவும், முன்னோர் கூறிய நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு என்னும் நாற்குணங்கள் வசிக்கப்பெற்றவர்களாயிருப்பார்கள். சிலதுட்டஸ்திரீகள் அதிக கொஞ்சம் படித்துக்கொண்டதினால் கர்வித்து செய்யத்தகாத காரியங்களிற் பிரவேசிக்கிறார்கள். கல்விகற்றபெண்களை மணம்புரியும் மணவாளர் பாக்கியவான்களெனக் கொண்டாலும், சில அயோக்கிய ஸ்திரீகளால் வெறுப்படைகிறார்கள். என்றால் சற்சங்கத்தின் வார்த்தைகளையும் நல்ல புத்தகங்களையும் பத்திரிகைகளையும் படிப்பதினால் ஸ்திரீகள் உத்தமிகளாய் நடப்பார்கள் என்பதற்கையமில்லை. இதரதேசத்து ஸ்திரிகளைப்போல் நம் நாட்டு ஸ்திரிகளையும் கல்வியிலும் மற்றும் கைத்தொழிலிலும் முன்னுக்குக் கொண்டுவருவது கடனேயாம்.

பத்—ர்.

களவழி நாற்பதுரை.

(7ம்—பக்கத் தொடர்ச்சி.)

தெரிகணை யெஃகந் திறந்தவா யெல்லாங்
குருதி படிந்துண்ட காக—முருவிழந்து
குக்கிற் புறத்த சிரல்வாய செங்கண்மால்
தப்பியா ரட்ட களத்து.

(பொ - ரை.) செங்கட்சோழன் பிழைத்தாரைக்கொன்ற போர்க்களத்தில்; ஆராய்ந்த அம்புகளாலும், வேல்களாலும் திறக்கப்பட்ட எல்லாப் புண்களினது வாய்களினின்றும் ஒழுகும் உதிரத்திற்படிந்து,(அவ்வுதிரத்தை) உண்ட காகங்கள் (தம்முடைய) நிறத்தை யிழந்து செம்போத்தின்புறத்தலை யுடையவாகி சிச்சிலிற்குருவி போன்ற வாயையுடையன.

(வி - ம்.) இதில் சோழனது கையின்றும் வெளிப்பட்ட அம்புகளும், வேலாயுதங்களும் பகைவருடலிற் றேய்தலால் அப்பகைவரது உடலெங்கும் புண்வாய்களாகக் காணப்பட்டு, அப்புண்வாய்கள்வழியே வெளிப்படும் உதிரத்தை யடைந்து உண்ணுங் காகங்கள் ; தனது பழைய கருநிறத்தைமாற்றி செந்நிறத்தையும், செவ்வாயையுமுடைய சிச்சிலிக்குருவி போன்று வெளிப்படும் எனச் சொல்லப்பட்டது. 5.

நாற்றிசையும் பிணம்பிறங்க யானை
அடுக்குபு வேறறிக் கிடந்த—இடித்தாறி
அங்கண் விசும்பி னுருமெறிந் தெங்கு
பெருமலைத் தூறெறிந் தற்றே யருமணிப்
பூணேந் தெழின்மார் பியற்றிண்டேர்ச் செம்பியன்றெவ்
வேந்தரை யட்ட களத்து.

(பொ - ரை) பெருதற்கரிய இரத்தினங்க (ளழுத்திய) ஆபரணமணிந்த தோற்றத்தையுடைய மார்பையும், (வேகம்) அமைந்தவலிய தேரையுமுடைய செங்கட்சோழன் பகையரசரைக் கொன்றபோர்க்களத்தில்; இடித்து முழங்கியழகிய இடத்தையுடைய ஆகாயத்தினின்று இடிவிழுந்து எவ்விடத்துமுள்ள பெரியமலைகளை தொடக்கற எறிந்தாற்போல, பலதிசைகளிலும் பிணங்கள் மிக யானைகளடுக்கப்பட்டு உயர்ந்துகிடந்தன.

(வி - ம்) இங்கே சோழனது செல்வப் பெருக்கைக்காட்ட பெருதற்கரிய இரத்தினங்களழுத்திய ஆபரணத்தை யணிந்தமார்பை யுடையவனென்றும், அவனது தேர்மிக விரைவிற் செல்லுமாறு அமைக்கப்பட்டிருப்பதையும், அவன் பகைவரைக் கொன்ற போர்களத்து பலதிசைகளிலும் பிணங்களோடு யானைகள் விழுந்து கிடந்ததானது இடிவீழ்ந்த மலைகள் எப்படி அடியற்று கிடக்குமோ அதுபோல பகைவர்கள் தமது யானைகளோடும் மடியும்படி போர்நடத்தியவனென்றுங் குறிக்கப்பட்டது. 6.

அஞ்சனக் குன்றேய்க்கும் யானை யமருழக்கி
இங்கு லிகக்குன்றே போற்றோன்றுஞ்—செங்கண்
வரிவரான் மீன்பிறழுங் காவிரி நாடன்
பொருநரை யட்ட களத்து.

(பொ - ரை) செவந்த கண்களையும், வரிகளையுமுடைய வரால்மீன் பிறழாநிற்கும் காவிரி நாட்டையுடைய (செங்கட் சோழன் ; தன்னோடு) போர்

செய்வாரைக் கொன்ற போர்க்களத்தில் ; நீலமலையை யொத்துத் தோன்றும் யானைகள் போரின் கட்கலக்கி, சாதிலிங்கமலையைப்போலத்தோன்றாநிற்கும்.

(வி - ம்) இதில்சோழநாட்டிலுள்ள ஆறு காவிரியாறென்றும், அவ்வாற்றில் வாரல்மீன்கள் விசேடமென்றுங் குறிக்கப்பட்டது. குறிக்கவே அவ்வாற்றினது நீர்வளஞ் சொல்லவேண்டியதில வாயிற்று. இவ்வாறு பொருந்திய நாட்டையுடைய சோழனது போர்க்களத்தில் வந்தயானைகள் முன்னே தன் சுயநிறமாகிய நீலநிறத்தை யுடையதா யிருப்பினும், அக்களத்திடத் துதிரவெள்ளத்தைக் கலக்குவதால் செந்நிறம் வாய்ந்த சாதிலிங்க மலையைப் போன்று தோன்று மெனக்குறிக்கப்பட்டது. 7.

யானைமேல் யானை நெரிதர வானாது
கண்ணேர் கடுங்கணை மெய்ம்மாய்ப்ப—எவ்வாயு
மெண்ணருங் குன்றிற் குரீஇயினம் போன்றனவே
பண்ணா ரிடிமுரசிற் பாய்புனல் நீர்நாடன்
நண்ணாரை யட்ட களத்து.

(பொ - ரை) ஒப்பனை யமைந்த இடிமுரசையொப்ப பாய்ந்துசெல்லும் காவிரிநீர் நாட்டையுடைய (செங்கட் சோழன்) பகைவரைக்கொன்ற போர்க்களத்தில் ; யானைகள்மேல் யானைகள்சாய நீங்காமல் (பெண்கள்) கண்களை யொப்ப கடிய அம்புகள் எவ்வுறுப்பின் கண்ணும் (பாய்ந்து அவற்றின்) உடலை மறைத்தலால் (அவை) அளவில்லாத மலைகளில் குருவியின் கூட்டங்களை யொத்தன.

(வி - ம்) இங்கே செங்கட் சோழனது போர்க்களத்தில் சோழனது கையின்றும் வெளிப்பட்ட அம்புகள் யானைகள்மீது பாய்ந்திருத்தலானது கணக்கில்லாத மலைகள்மீது தங்கிய குருவிக்கூட்டங்களை யொத்ததெனக் குறிக்கப்பட்டது. எங்ஙனமெனில் யானைகளைமலைகளுக்கொப்பிடுவது புலவரியல்பு. அம்மலைகளாகிய யானைகளின் உறுப்புகளில் கணக்கில்லாத அம்பின் கூட்டங்கள் பொருந்தியிருப்பதால் அவைகள் குருவியின் கூட்டங்கள்போலத் தோன்றுமெனவுங் குறிக்கப்பட்டது. 8.

தொடர்ச்சியுண்டு.

தமிழுழவன்.

பெண்களுக்குக்கல்வி.

அன்னத்தினால் பசியும், பானத்தினால் தாகமும், நித்திரையினால் அலுப்பும், தீருமென்பதை அனைவரும் ஒப்புக்கொள்வோம். உண்டுகுடித்துறங்குவதால் பசியும், தாகமும் சிரமமும் வளருமென்றால், ஒருவரும் ஒப்போமல்லவா ? ஒரே காரணத்தினின்றும், ஒன்றுக் கொன்று நேர்விரோதமான இரண்டு காரியங்கள் விளையுமெனின், அதைநம்புவது வெகுகடினமாயிருக்கும். ஆயினும் இது புதுமையல்ல. நம்முடைய சுகதுக்கங்களுக்குரிய காரணங்கள் பலவுளவெனினும், நன்றாய் ஆராய்ந்து பார்க்கும்பொழுது, அவற்றில் பெண்களே தலை காரணமாய்விளங்கும். அன்னையாய்ப் பெற்றெடுத்து, அன்புடன் வளர்த்துக்காத்துப், பெண்டிரா யின்பந்தத்து, பெட்டியாய்ப் பொருளைச் சேர்த்து, அடியவா யுபசரித்து, அறுசுவை யன்னமிட்டு, மந்திரியாய்ப் புத்திசொல்லி, மஹிமையை ஓங்கச்செய்து, தோழியாய்த் தொல்லைதீர்த்துத் துணைவியாயுயிரைக்காத்து, மக்களாய் மனமகிழ்ந்து மனிதருக் குதவிசெய்யும் பெண்களே பேதப்பட்டால், பெருமையைக் கொன்றுவிட்டுக் குடிகளை

க்கெடுத்துவிட்டுக், கொலைபாதகம் விளைத்து, நண்பரைப் பகைவராக்கி, நல்லறமெல்லாங்கொன்று, பொருளெலாம் பறக்கச்செய்து, பெண்மையைவிலைக்குவிற்று, உடல்தனைப் பளுவாயாக்கி, உண்டியை விஷமாய்ச்செய்து, அறம்பொருளின்பமென்னும், அனைத்தையும் வெறுக்கச்செய்வாள், என்னுமிவ்வுண்மைதனை யறியாரும் உலகினுண்டோ ? மனிதர் வாழ்க்கைக்குப்பொன்னும் பெண்ணே. அவர்மனதுக்குப் புண்ணும் பெண்ணே. ஆகாயத்தையளாவிய விருக்ஷத்தையும், அதன் இலை பூ கனி முதலிய வனத்தையும், கடவுளானவர் ஒரு சிறிய விதையில் அமைத்தாற்போல், இக்கருத்துகளையெல்லாம் வெகுமாட்சிமைதாங்கிய திருவள்ளுவ நாயனார் இரண்டு குறளிலடக்கி,

1. “ மனைத்தக்க மாண்புடைய ளாகித்தற் கொண்டான்
வளத்தக்காள் வாழ்க்கைத் துணை. ”

2. “ மனைமாட்சி யில்லாள்க ணில்லாயின் வாழ்க்கை
யெனைமாட்சித் தாயினு மில். ”

என்று அருளிச்செய்தனர். இதன் கருத்தென்னவெனில், இல்லறத்துக்கு இசைந்த நற்குண நற்செய்கைகளை யறிந்து நாடித்தன் கணவனதுவரவு செலவுகளை நன்றாய் சீர்தூக்கி நடத்தவல்ல மனைவியே வாழ்க்கைக்குத் துணையாவாளென்பதும், அளவற்றபொருளும், பேரும், பிரதிஷ்டையும் பெற்றிருந்தும், மேற்கண்ட தன்மையுடைய மனைவிமாத்திர மில்லாவிடின், ஒருவன் சுகமும், சிறப்பும், புகழுமற்றவனாவானென்பதுமேயாம் இக்குறளின் கருத்தைத்தீர விசாரிக்குங்கால், பொருளைச்சம்மதிப்ப தொன்றுமாத்திரம் கணவனுக்குத் தொழிலென்றும்; அதைச் சம்மதித்தபிறகு முறையறிந்து செலவுசெய்தலும், தகையையறிந்து விருத்திச்செய்தலும் இன்னுமுள்ளபலதொழில்களும் மனைவியைப் பொறுத்ததென்றும், இவ்வாறு உலகவாழ்க்கைக்குரிய தொழில்களெல்லாம் ஆண்பெண்களுக்குப் பகுத்தளிக்கப் பட்டிருக்கிறதென்றும், ஆண்தொழில்கள் கடினமுள்ளவையாயினும், பெண்தொழில்கள் அவற்றிலும் கடினமானவையென்றும் விளங்கும். தகுந்தகாலத்தையும், கருவியையுங்கொண்டு பொருள்படைத்த லொன்றுக்கே, இயற்கைச் செயற்கையறிவுகள் இன்றியமையாக் கருவியெனக்கருதி, அவ்வறிவு நிமித்தம்நமது பொருளில் பெரும்பாகத்தைச் செலவழிப்போமாயின், இல்லறமின்னதென்றும், அதில் ஆத்மவிஷயத்திலும் கணவன், மக்கள், நண்பர், சுற்றத்தார், உலகத்தார், கடவுள் முதலானவர்கள் விஷயத்திலும், தனக்கரிய அறன்களும் கடமைகளும் இப்படிப்பட்டவையென்றும், அதற்கியைந்தபடி செலவழித்து பொருள்காக்கும்வழி இத்தன்மையதென்றும், இப்பொழுது சுகத்தையும், புகழையும், இனி நித்தியபதவியையும், ஆநந்தத்தையும் அளிக்கத்தக்க நல்லொழுக்க மின்னதென்றும், தேர்ந்தறிந்தும், தானுஞ்சுகமடைந்து, தன்னையண்டிய கணவன், மக்கள், முதலியவர்களுக்கும், சுகத்தை விளைக்கப் பெண்களுக்குக் கல்வியே வேண்டியதில்லை என்பது யுக்திக்காவது, பிரமாணத்துக்காவது, அடுத்திருக்குமா ? வென்பதை சற்றுவிசாரிப்போம்.

பெண்களைக் கற்பிப்பதனு லடையத்தக்க ஒப்பற்றபயன்களிற் சிறிதை இச்சித்தாந்தத்துக்கு இயைந்த வரையில்விரித்துரைப்பதற்குமுன், இவ்விஷயத்தில் நம்மவரில் சிலர் செய்யும் ஆக்ஷேபங்களை எழுதி அவற்றிற்குச் சமாதானங்களை சொல்வோம். வெகுகாலந் தொட்டுவந்த பழக்கத்தின் வாசனையைக் கைவிடமாட்டாத சிலர், முதலில் பெண்களைக் கற்பித்தல் சாம்பிரதாயவிரோதமென்றும் ; இரண்டாவது, அது அனாவசியக மென்றும் : மூன்று

வது, அது சாத்திர விரோதமென்றும், நான்காவது, அதனால் பெண்களின் ஒழுக்கம் கோணிப்போமென்றும்; இன்னும் பல பழுதான ஆக்ஷேபங்களைச் செய்வார்களென்பதை எல்லோருமறிவோம்.-இனியவற்றிற்கு முறையே எங்கள் சக்திக்கியைந்த வரையில் சமாதான முரைப்போம்.

இப்பவுமிச் சென்னைமா நகரத்தில் 20• வருடகாலமாக பாலிகா பாடசாலைகளை சிலகனவான் பொருள் அமோகமாக சிலவுசெய்து ஸ்தாபித்திருக்கின்றார்கள். அதனால் பெண் குழந்தைகள் வாசித்து நாகரீகத்தையடைந்து வருகின்றதை நாம் பிரத்தியட்சமாக விப்போது காண்கின்றோம். பெண்கல்விவிருத்திக்காக அனேக மாதாந்திர பத்திரிகைகள் ஏற்பட்டிருக்கின்றது. அவைவருமாறு:— சென்னை பெண்மதிபோதினி, சென்னை விவேக சிந்தாமணி, மாதர் போதினி, மாதர் மித்திரி, சுகுணபோதினி, மாதர் நீதி, பெண்மதிமாலை, பெண்கல்வி, நல்லதாய், நல்லதங்கை, இன்னும்பல பத்திரிகைகளும் இப்பொழுது நடைபெற்று வருகின்றது. இதனை முக்கியமாய் சில கனவான்கள் அன்புகொண்டு பெண்கல்வியை விருத்திக்குக் கொண்டு வருவார்களேயானால் நமது இந்துதேசத்தில் நல்ல நாகரீகமும் கைத்தொழில் களும் விருத்தியாகுமென்பதற்குச் சந்தேகமில்லை.

வி. வே. கி. நாராயணசாமி பிள்ளை.

சுவர்ணாம்பாள்.

(17-ம் பக்கத் தொடர்ச்சி.)

பின்னுமவ்வரசகுமாரன் இவளை உற்றுநோக்கி இவள் உலகில் பெருக்கெடுத்துவந்த பேரின்ப வெள்ளமோ! அன்றி பருகிற்றெவிட்டாத பசுந்தேனோ! ஒருவருக்கும் பூண்பதற்கிசையாத பொன்மாலையோ! அன்றி தூரத்திற் காணும்போதே பரிமளிக்குங் கஸ்தூரியோ! பெரிய உலகத்தில் எவரையுங் கொல்லாமல் எம்மைபோன்றோர் உயிரைமாத்திரம் வாட்டுகின்ற யமனோ! அன்றி கூவாமற் கொஞ்சுங் குயிலோ! யல்லாமல் எல்லாகலைகளுக்கு மினிய மானோ! என இவளது சாயலை வர்ணித்து மீண்டும்; இவளடியைப்பார்த்து மலர்மீது நடக்கப் பொருமலோ! அல்லது மதநூலில்அமிர்தநிலையாராயும் இளைஞர்களது வாய்ச்சொல் பட்டோ! மன்மதனது திருமுடிமேல் வைத்தோ! மங்கையர்கள் கையால் வருடப் பெற்றோ! வானோரை வசீகரிக்கச் செம்பஞ்சூத் தீட்டியோ இவளது அடிசிவந்தது; இவள் மதனராஜன் சரித்திர நிறைந்த புஸ்தகத்தைத் தாங்கி, ஆதிபிரமனது வாகனமாகிய அன்னத்தின் நடையைத் திருத்திக்காட்டுஞ் சிவந்த கமலத்தாளை யுடைத்திருக்கிறாள். அன்றியும் இளம்பாளை விரியப்பெறாத பசுங்குரும்பை போலும், நன்மையல்லனவற்றைச் செய்யாத முனிவர்கள் செய்யுந்தவங்களை நிறுக்குந் தராசுபோலும், பரடினையுடைய இவளது கணைக்கால்; மதராஜனது விருதுகளத்தனையும் ஊதாமற்படிக்குக் காட்சியிலே காட்டுகின்ற காளம் போலுமிருக்கிறது. கண்களாகிய சேற்கண்டைகளைப் பிடிக்க சூதினால் நிற்கும்வரால் மீன்கள்போலுமிருக்கிறது. மன்மதன் தனது பகைவரிடத்தில் முதுகுகாட்டாமல் வெட்சிப்பெறும்படிகட்கும் அம்பறாத்தூணிபோலுமிருக்கிறது. மன்மதனது பெருத்தகணைகளைந்து பின்னிடும்படி இளைஞர்கள் கொண்ட கருத்தை வருத்தவந்தது போலுமிருக்கிறது.

ஸ்ரீ சீதாதேவி தங்கியிருந்த காலத்தில் இலங்காபுரில் வந்தடர்ந்த தூதர்களை (குரங்குகளை) யெல்லாம் மருட்டுகின்ற குரங்கென்றே இவளது முழங்

காலைச் சொல்லலாம். இவளது தொடைகள் ஆசையாகிய மோகக் கடலைக் கடத்தற்குவந்த தெப்பமென்றே சொல்லலாம். இன்னுஞ் சொல்லவேண்டுமானால் அளவு சொல்லப்படாத இளைஞர்களது இச்சையாகிய மதயானையைக் கட்டி வைக்குங் கம்பமென்றுஞ் சொல்லலாம். அன்றிமையலை நாட்டி ஆடத்தகுந்த நாடகசாலையின் உச்சியிலிருந்தமைக்கப் பட்ட தூண்களென்றுஞ் சொல்லலாம். அன்றி கொம்புகளையுடைய யானையின் துதிக்கையோ! அல்லது மன்மதனது வசந்தபண்டபத்தின் தோரணவாயில் நாட்டப் பெற்ற வாழைகளோ! யான் என்னென்று சொல்வே னென்பான். மீண்டும், மாரனரசொழிய மற்றோர் அரசிலையென்று ஆரமயல் பூட்டும் அரசிலையன்னக்குறியையுடைய இப்பெண்மணியினது இடை உடுக்கை போன்றதும், கைப்பிடியளவே சொல்லக்கூடியதும், வல்லிக்கொடி யோன்றதும், வஞ்சிக்கொம்பைப் போன்றதுமா யிருக்கிறது. கலைமகளிருந்து விளையாடும் நாவையுடைய முதுமொழிப்புலவர்கள் சொல்லும் சொற்பயன்போல இதுதெரியும், தெரியாதென இவளிடை மறைந்தும் மறையாதிருக்கிறது, செழுமை தரும்படியான இல்லற வின்பத்தைத் தீதென்பார் நெஞ்சைச்சுழித்து மாற்றி விடுவதுபோ லிருக்கிற திவள் உந்திச்சுழி. இவளது வயிற்று மயிரொழுங்கு ஐயம்பெற்ற மன்மதனது கையில் சதாநீங்காதிருக்குஞ் சிலை நாணோ! செங்கோலோ! அல்லது கொங்கை யென்கிற யானையின் துதிக்கையோ! குங்குமமணமும், அழகும் பொருந்திய இரண்டு கொங்கைகளாகிய தாமரைப்போ தரும்புகளையீன்று யற்புதம் விளைக்கவந்த செழுந்தாமரைத்தண்டோ! மதனுக்குச்செய்யுந் திருநாளில் வெளிவரும் அல்லூற்றேரிற் பிணைக்கப்பட்ட வடக்கயிறோ! நீர்க்குமிழிபோன்ற கொங்கைகளிடத்து இளநீரொடு கலந்து பூசியசாந்தும் புழுகும் ஒழுகியதாரையோ! கொங்கைகளாகிய மலைகளிடத்து வசிக்கும்படி பெரியதவத்தைச் செய்த முனிவர்கள் தமது நெஞ்சை யேற்றுதற் காக அமைக்கப்பட்ட சாரமோ! இவளது இடையைப்பற்றி யின்னும் எண்ணிப் பார்ப்போமானால் பலகோடி யுவமைகளுக்கு மிசையாதுபோ லிருக்கிறதே யென்பான். இவளது தனங்களுக்குக் குசிர்ச்சிபொருந்திய தாமரை யரும்புகள் யொத்திருக்குமா! ஒஓ அவ்வரும்புகள் இவளதுகொங்கைகளைப்போல சதாகளர்ச்சி யுற்றில்லாமல் சூரியனைக்கண்டால் மாத்திரம் அலர்தற் குரியனவாயிருக்குமாதலால் அங்கனஞ்சொல்வது பொருந்தாது. மற்றென்னை யென்போம். சூதாடும் (வட்டு) சூதாட்டத்தில் வைக்குங்காய் என்றுசொல்லலாம், அதுவும் பொருந்தாது. எங்ஙனமெனின்? அவ்வாட்டத்தில் அதில்அடிக்கடி வெட்டு வெட்டுஎன வெட்டுப்படும் விதியை யடைந்திருக்கிறது. அதனால் சக்ரவாகப் பட்சியை சரிசொல்லலாம். என்றாலும் அப்பட்சிக்கு மிகுந்தசிறகுண்டாயிருத்தலால் அதுவுங் கூடாமையே யாகும். அதனால் ஐயம்பெற்ற மன்மதனது திருமுடி யென்னலாமோ! அப்படி சொல்வோமானால்இவளது ஸ்தனங்கள் சிலவேளைகளிற் குளிர்ச்சியாகவும், சிலவேளைகளிற் சூடாகவுமிருக்குமே அவ்விதகுணங்கள் மதன்முடியி லமைதற் கூடாமை யாகுமே. ஆனால் பெரிதும் பசுமை நிறம்பொருந்திய இளநீர்களென்னலாம்.

இவளது ஸ்தனங்கள் எம்போல்வார் சையோகத்தி லமையுங்கால் புளகாங்கிதங்கொளுங்குண முடைமையாலும், அவ்விதவெழுச்சி இளநீரிடத் தின்மையாலுமெப்படியதைச்சொல்வது? கூடாதே. பின்னையென்ன சொல்லுவோம்! யாவராலுஞ் செய்தற்கரிதாகிய சிதமணிச் செப்புகளென்போம். ஆனால் தேவர்களுமமுத மெனக்கையேந்துமமிர்தம் இவளது ஸ்தனங்கள்

உண்டாகும். அச்செப்புகளிலுண்டாவ தெங்ஙனங்கூடும்? கூடாதே. யதனால் அத்தநதியில் உண்டாகிய அழகிய (புற்புதம்) நீர்க்குமிழி யென்னலாம். ஆனல்அதுஇவளதுதனங்களைப்போலசந்தனமுங்கஸ்தூரியுந்தாங்கி நிலைபெற மாட்டாதே. தாமரை முகையரும்பெனலாம். அதற்கு இவளது தனமுகப்பி லுள்ள கருமையில்லையாதே. பெரிய கும்பங்களெனச் சொல்வோம் சொன் னாலுமக்கும்பங்கள் இவளது தனங்களைப்போல் மாலையணிந்து, சுணங்கு படரப்பெற்றிராதே யல்லது,

(இன்னுந் தொடரும்.) குமரவேள்.

நீதிசாத்திரம்.

நூன்முகம்.

அளப்பரு நீதிநூல்கள் நந் தமிழ் நாடியற்றிய தவமென விளங்கா நிற்கின்றன. அவை, செந்தமிழ்க் கடலைத் தம்மறிவாம் புணைகொடு கடந்த செந்நாப் புலவோரா னருளப்பெற்று எந்நாட்டவருந் தம் முடிசூட்டிக் கொள்ளு மாறு பொலிவெய்தி நின்றன.

அஃதங்ஙனமாக, வடநூல் வல்லார் தந்நூல்களி னாங்காங்கு கண்டன சில்ல திரட்டி "நீதிசாத்திர" ப் பெயராற் காட்டினர். அக் கருத்துக்களும் நந்தமிழ்வல்லோர் பாற்பட்டுத் தத்தம் நூல்களுட் பல்வேறிடங்களிற் கூறி யிருப்பினும், யாம் அவையிற்றை யொருங்கே மொழிபெயர்ப்பா னுர்வமுற்று மாற்றுன் நீதிசாத்திரப் பெயரானே இயற்றுவா னுயினேம்.

தமிழ்வல்லோர் இவையிற்றை இலக்கண வழூஉக்களுக்குக் காட்டாக வெனினுங் கைக்கொண்டு எம்மை மருட்டாவழித் தெருட்டுவாராக.

மண்முகத் தெனது மயறெறப் போந்த
சண்முக னருளுளந் தழீஇ
உண்மைநூ லுரைப்ப னுலகி னோர்க்கே.

காப்பு.

ஆதிநூல் கூற்றுக் கமையைங் கரற்றொழுதும்
நீதிநூல் கூற நெடிது.

அவையடக்கம்.

வேதச் சினையா விரிசாத் திரமலராப்
போதப் புலவோர் புகழளியாச்—சீதந்
தருசோலை யாமவையைச் சார்தும் பிழையா
வருமூல வெப்பகற்று மாறு.

நூல்

(உறவோர் இவர் எனல்)

வாய்மையே மெய்த்தாய் வயங்கறிவே மேதாதை
தூய்மைசெய் நல்லறமே சோதரமாம்—ஏய்ந்ததயை
நட்பாகுஞ் சாந்த மனைநற்புத் திரன்பொறையா
முட்கொள் ளிவையா றுறவு.

(மானத்தின் சிறப்பு)

மானம் படவரின் வாழா துயிர்நீத்திங்
கீனம் படா துயர்வை யெய்துகவே—மானமது
பட்டால் வசைமதியம் பாநுவுள ளான்றுமுயிர்
விட்டாலுஞ் சீர்த்தி விடா.

(இவர்க்கிது விருப்பெனல்)

அந்தணருக் காமடிசி லாவினுக்கிங் கெய்தும்புல்
சிந்தைவலி மிக்க திறல்வீரற்—குந்தமரில்
ஒன்னார் தலைச்செறுதல் ஊற்றகொழு நற்பெறுதல்
மின்னாருக் கெய்தும் விருப்பு.

(இவர் ஞானி எனல்)

பிறர்தாரந் தன்னையே பெற்றதா யாகப்
பிறர்பொருளை யோடாகப் பேணிப்—பொறைமேவும்
வையத் துயிர் யாவுந்தன் மன்னுயிரா வுற்றோனே
யொப்பிலுயர் ஞானி யுணர்.

(இவை யநித்தியம் எனல்)

யாக்கை யிளமை யநித்தியமே யஃதுறாஉம்
வாழ்க்கை யொடுவளனு மாறுமே—நீக்கமறுஞ்
சாவோ தலைநிற்குந் தன்மைத் துயிர்வாழ்வீர்
ஆவோ புரிவீ ரறம்.

(மங்கையர் மனம் இத்தகையதுஎனல்)

தந்தை யொடுதன் தனித்துணைவன் றானீன்ற
மைந்த னெனினும் வனப்பினரேல்—பைந்தொடியார்
சிந்தையன் னார்வயமாச் செல்லுமாற் காளையீர்
நிந்தை யகன்மி னினைந்து.

கா. ந. முதலியார்.

றகர - ரகர பேதங்களை விளக்கும்.

சிறுமொழிகள்.

அரக்கொடியுடையோனாகிய துரியோதனராசனுக்கு அறக்கொடியுடைத்த கர்னராஜன் சகோதரன். அரமகளாகிய இந்திராணி அறமகளான தருமவழிநிற்கும் பெண்ணாள். அரமனையில் வசிக்கும் அரசன் அறமனையான தர்மசாலைகட்டலவசியம். அரம் என்னும் கருவிசெய்யும் கம்மாளன் அறம் என்னும் தருமம்செய்தான். அரலையான கோட்டையைச்சுற்றிலும் அறலையாகிய நீரைக்கண்டாம். அரவு ஆகிய பாம்புகடித்தும் பிழைத்தவன் கால் அறவு எனும் அறுபட்ட இடமாகவே யிருந்தது. அரனிடத்த வனபார்வதி அறனிடத்தவள் எனும் தருமத்தினிற்பவளுக்கு வரமளித்தாள். அரன் ஆகிய ஈஸ்வரன் அறன் எனுந் தருமானுஜனே. ஆர எனும் நிறையவிருக்கும் விசனம் ஆற - தணிய கடவுள் கிருபையுண்டு. ஆரகமாகிய இரத்தம் ஆறகமாகிய நதியினிடத்திருக்கும் ஜந்துகளுக்குமுண்டு. ஆரணன் ஆகிய பிரம்மா ஆறணன் - தனியாகியமேல் வாயையுடையவனும். ஆரணியாகிய காளி ஆரணியாகிய (ஆற்றையணிந்த) சிவனுடன் நடனமிட்டாள். ஆரம்பு ஆகும்பேரொலி ஆறம்பு - ஆறுவிதமான அம்புகளை ஒரே நேரத்தில் பூட்டினால் உண்டாம். ஆரல் ஆகியநெருப்பு ஆறல் - தணிதல் தண்ணீரால்.

கடிதம்

மதுவிலக்கு - என்னும் விஷயமும் - துன்மார்க்கனுக்கு ஜோட்டடி என்னும் விஷயமும் அடுத்த பத்திரிகையில் வரும்.

அருட்கவி கண்டனம் வெளியிடப்பட மாட்டாது.

நமது அத்தியந்த அன்பர்கள் வெளியிடும் சிலபத்திரிகைகளின் முடிவில் "அன்பர்கள் பூஜாதிரவியத்துடனும் சிரவணச் சின்னத்துடனும் வரக்கோருகின்றனம்" எனவெழுதியிருப்பதைப் பலமுறையும்பார்த்து விசனித்து அப்பெரும்பிழையை உணர்வார்களென கடந்தசிலமாதங்களுக்கு முன்னர் சிரவணச் சின்னமாவ்துயாது? என வெழுதினேம் அதைக்கண்டவர்கள்பகுத்தறியாது யாரடா விட்டது மான்யம் என்றால் எனக்கார் விடுகிறவன் நானே விட்டுக்கொண்டேன்" என்பதாக, "விபூதிருத்திராக்கமாகியசிவச்சின்னத்தோடு" என்று எழுதி வெளியிடுகிறார்கள். இதனால் கல்வியில்பழகும் மாணாக்கருக்குக் கெடுதியும் கற்றோருக்கு நாணமும் உண்டாகிறது. இப்போலி நாவலர்களின் கல்வியறிவே யறிவு. தமிழ்ப்பதத்தின் அர்த்தபுஷ்டியையும் வாக்கியத்தையும் கவனியாது இப்பெரிய பிழையானவார்த்தையை அடிக்கடி உபயோகப்படுத்தி வருவதினால் சாமானியமாய்ப் படித்துஅப்பழக்கத்தைக் கையாடும் சிலரும் "ம-ா-ா-ஸ்ரீ ஐயா அவர்கட்குச் சிரவணம்" என்றெழுதுகிறார்கள் இவர்களிவ்விதமெழுதும் கெட்டப்பழக்கம் முன்சொன்னபோலி நாவலரால் உண்டானதென சொல்லாமலே விளங்கும். சிரவணம் என்றால் காது, கர்னம், செவி, முதலிய பெயர்களைக் கொள்ளும் பதமாம். ஆகையால்தான் "சிவஞானந்தஞ்செய்யக் கோருகின்றனம்" என்றெழுதுகிறார்கள் அறிஞர். அதுபற்றி சிரவணச் சின்னமென்றால் - காதுக்கணிகலமான பொருள் அதாவது பிரசங்கத்திற்குவரும் அன்பர்கள் காதில் கடுக்கனிட்டு வாருங்கள் என்பதாகப் பொருள்தரும். சிரவணச் சின்னத்துடன் என்றெழுதும் பதமறியா பாமரக்கவி குளிர்க்கப்போய் சேற்றைப்பூசிய தொபப விபூதிருத்திவிக்கமாகிய சிரவணச் சின்னமென்றெழுதும்விதத்தைத் தவிர்த்து, சிவச்சின்ன மென்றெழுதினால் எவ்வளவோமேம்பாட்டையூட்டுமல்லவா?

ஓர் கால் சிரம் - வணம் எனப் பிரித்து தலைக்கு அழகுஅதாவது விபூதி பூசிவரவேண்டும் என்பாரெனில் நீறிடா நெற்றிப்பாழ் எனப்பெரியார் கூறியிருப்பதால் நீறு துலங்குவது நெற்றியேயன்றி தலையல்லவே. கல்வியுறிவுடன் சற்சங்கத்தில் பயிலுமன்பர்கள் சிரவண மென்றால் நன்குணர்வார்கள். அவர்களுக் கெடுத்தெழுத வந்ததாக கொள்ளவேண்டாம். விபூதிருத்திராக்கமென்னும் சிரவணச் சின்னமென எழுதி மற்றவர்களையும் கெடுப்போருக்கென கொள்ளவேண்டுகின்றனன். இச்சிறு வார்த்தையின் தாத்பரிய மறியாதாற்கு இத்தகைய அனாசாரப்பேர்வழிகள் ஸ்ரீமத் இராமலிங்கசுவாமிகளையும் அவரது திருவருட்பாவையுந் தூஷித்துழல்வது அந்தோ பரிதாபத்தினும் பரிதாபமே யென்பன்பர் சற்பண்டிதர்.

சிவக்கிள்ளாதாரி,

ஜனனப்பிரஸ்தாபம்

சபாப்ர சங்கக்கோளரி எனும் பட்டமேன்? சென்னைச் சிந்தாதரிப் பேட்டை நிவாசியும் மிஸ்டர் பாப்பம் ஏடிகாங் துரையவர்கள் கிரககண் காணியருமாகிய எனுசிசாதாம் D. P. ஐயாவுபிள்ளையவர்களுக்கு 3-வது ஆண் குழந்தை ஜனனம் தாயும்பிள்ளையும் சுகமுடனுஞ் ஜீவிக்கவாழ்த்துவாம்.

சென்னை நுங்கம்பாக்கம் கன்னியாநகர்.

வி. சா. மா. சாரங்கபாணி தாஸ்.

சமாசாரக்கொத்து

மகான் ஸ்ரீ செங்கற்பட்டு சுவாமிகள்:—இவரது 14-வது திருநக்ஷத்திரம் வரும் 9உ வியாழக்கிழமை திருவொற்றியூர் மடத்தில் வெகு ஆடம்பரமாய் நடத்தப்பெற்று 2000 ஏழைகளுக்கு அன்னமுமளிக்கப்பட்டது.

கல்கட்டா வண்டிக்காரர்களின் கட்டுப்பாடு:—கல்கட்டாவில் வண்டிக்காரர்கள் தொழில் நிறுத்திவிடக் கட்டுப்பாடுசெய்து விடுவார்களென்றபயம் இன்னும் அகலாமலே யிருக்கின்றது. இதன் மூலகாரணம் ஓர்உத்தியோகஸ்தரின் கொடுஞ்செய்கையே யென அறிகின்றோம். வண்டிவிசாரணைக் காரராகிய மிஸ்டர் லெய்ஸ் என்பவர் பரிசோதனைக் காலத்தில் வண்டிக்காரர்களையெல்லாம் தாறுமாறாகத் திட்டியும் அடித்தும் தொந்தரைசெய்ததினுலேயே வண்டிக்காரருக்கு இத்தனை கோபமுண்டாயிற் றெனப்படுகின்றது.

விக்டோரியா மகாராணியின் சிலை.—கராச்சி நகரத்திலிருந்து வேல்ஸ் இளவரசர் புறப்படு முன்னர் அங்கே விக்டோரியா மகாராணியின் உருவச்சிலையைத் தமது கையினுல் திறந்துவைப்பார்.

ஸ்திதி மாறுபாடின்றி நிற்றல்.—லண்டன், நவம்பர் 3உ ருஷியாவின் பொது ஸ்திதி இன்னும் மாறு பாடமலே நிற்கின்றது. யூதர்களுக்கு விரோதமானகலகங்களும் கொலைச்செயல்களும் கிஷினெப், ரோஸ்டாப், கீப், போல்டேவா, ஸெவாஸ்டொபோல் முதலிய பலவிடங்களில்நடந்துவருகின்றன.

மன்னிப்பின் அளவு.—லண்டன், நவம்பர் 4உ ருஷிய மன்னிப்புக் கட்டளைமிகவும் பரந்ததன்மை யுடையது. ராஜாங்க சம்பந்தமான கைதிகள் விடுதலை பெறுவார்கள்.

தொந்தரைகளின் தொடர்ச்சி.—ருஷியா அமைதிபெற்று வருகிறதென்று நினைக்க அடையாளங்கள் காணப்படவில்லை. நாள்தோறும் புது இடங்களில் கலகங்களும் கொலைச் செயல்களும் ஏற்பட்டு வருகின்றன.

இம்மாதம் 6-ஆந்தேதியன்று புனுவில் இந்தியப்பெண் சுதேசிய விஷயமாயொரு கூட்டங்கூடினுர்கள்.

ஒரு கூலிப் பெண்ணேடு பலாத்கார மாகப் புணர்ந்த ரயில்வே கார்டு ராம்ஸ்டெல்லும் பிரைவெட்டை மாக்கும் முறையே ஏழுவருஷம் சிறைச்சாலைவாசிகளாகச் சிக்ஷை பெற்றுர்கள்.

மதுரையில் உயர்தரக் கலாச்சாலைகள் இரண்டு உண்டு. நேடிவ் காலேஜ், பசுமலைக் காலேஜ் இவ்விருசாலைகளின் பெயர்களும் இப்பொழுது மாற்றப்பட்டன. அவையாவன மதுரைக்காலேஜ், அமெரிக்கன்மிஷன்காலேஜ்மதுரை.

மாக்ஷிமைதங்கிய சென்னை கவர்னர் துரையவர்கள் தமது சுற்றுப்பிரயாணத்தில் கொச்சிநாட்டுக்குச் சென்று புதிதாய்ப் போடப்பட்ட கொச்சிவன டிராம்வண்டிப் பாதையை இம்மாதம் மூன்றுந்தேதி திறந்தார்.

மறுமணத்தால் நேர்ந்த மரணம்:—குண்டூரி லிருக்கும் ரங்கநாயகி யம்மாள் என்னும் பிராமணவிதவை, இரண்டாந்தாரம் கலியாணம் செய்துகொண்டும், ஊரார் கூறும் அவமதிப்பைப் பொறுக்காமல் சமீபகாலத்தில்கிரிவிஞுபில் என்று வழங்கும் மண் எண்ணெயால் தேகத்தை சுத்தப்படுத்தி ஈராடைக்கொப்ப துணிகளை அதில் நனைத்து உடுத்திக்கொண்டு நெருப்பைவைத்துவிட, குப்பெனப்பற்றிக்கொள்ள விதவைக்குமரி விண்ணுலகடைந்தாள், அந்தோ ! பரிதாபம் !

முனிசாமி அல்லது பெரியசாமி என்பவன் சென்ற புதன்கிழமை பகல் யானைகெவுனி தெருவில் ஒருகுழந்தையின் கையிலிருந்த ஒரு பொன் காப்பைத் திருடினதாக நேற்று முன்தினம் டவுன் கோர்ட் சீனியர் மாஜிஸ்டிரேட்முன் குற்றஞ்சாட்டப்பட்டு, குற்றவாளி அநேகந்தரம் தண்டிக்கப்பட்டிருப்பதால் 1½-வருஷக் கடுங்காவல் விதிக்கப்பட்டான்.

டவுன் கோர்ட்டு சீனியர் மாஜிஸ்டிரேட்டு மகமத் அஜிஸுடின் உசேன் சாயபு பகதூர், கான்சாகேப் வருகிற டிசம்பர் மாதம் முதல்தேதியிலிருந்து தென்கன்னடம் ஜில்லாக் கலெக்டரர்கவும், ஜில்லா மாஜிஸ்டிரேட்டாகவும் பதில் பார்க்கும்படி நியமிக்கப்பட்டு விட்டார்.

இந்திய மதுவிலக்குச் சங்கமொன்று சென்ற வருஷம் பம்பாயில்முதல் தடவையாகக் கூடிற்று. இவ்வருஷம், பெனாரிஸில் இரண்டாவது தடவையாகக் கூடுமென்றும், அப்போது ஸர் பாலச்சந்திர கிருஷ்ணா அக்கிராசனம் வகிப்பாரென்றும் தெரிய வருகிறது.

இந்தியாவுக்குப் புதுகவர்னர் ஜனரலாய் வரும் லார்ட் மின்டோ என்பவர் நவம்பர்௴ 20௳ பம்பாய் நின்று புறப்பட்டு 22௳ புதன்கிழமை கல்கத்தா சேருவார்.

ஈஸ்ட் இந்தியா ரையில்வே கம்பெனியில் காமிக்கா சரன்சென்—என்பவன் மோசம் செய்து திக்கட்டுகளை விற்பனை செய்ததற்காக அவ்விடத்திய பிரசிடென்ஸி மாஜிஸ்ட்ரேய்ட் முன்பாக விசாரணைக்கு வரப்பெற்று அடுத்த செஷன் விசாரணைக்குக் கமிட்செய்யப்பட்டடான்.

கல்கத்தா ரெவினியூ போர்ட் மெம்பர் •Mr C. U. பால்டன் என்பவருக்குப் பதிலாக கனம் மிஸ்டர் கிருஷ்ண கோவிந்தகுப்தா என்பவரை நேமிக்கப்பட்டிருக்கிறது.

குவாலியர் போஸ்ட் மாஸ்டர் ஜனரல் ராய்பகதூர் தௌலத்ராம், C. I. E. என்பவரை நமது இளவரசரும், இளவரசியும் இந்தியாவை விஜயஞ்செய்து திரும்புகிறவரையில் அவர்களுக்குவரும் தபால்களுக்காக சுப்பரின்டென்டாக நியமிக்கப்பட்டிருக்கிறது.

அக்டோபர்௴ 27௳ வெள்ளிக்கிழமை பம்பாய் துறைமுகத்தில் வந்திறங்கினவருள் கப்பர் தாலா மகாராஜா அவர்களும், மகாராணி யவர்களும் ஐரோப்பாவிலிருந்து வந்தவர்களில் இவர்களொருவராம்.

பூனாவில் ஒரு சுதேசஸ்திரிக்கு இரட்டைப் பிள்ளை பிறந்தது. அச்சிசுவுகளின் முதுகு ஒன்றோடொன்று ஒட்டிக்கொண்டு இரண்டு சிரங்களுடனிருக்கின்றன. இரண்டுக்கும் தனித்தனியே பாதங்களும், கால்களு மிருக்கின்றன ஒன்று நடந்தால் மற்றொன்றை யிழுத்துச் செல்லுகின்றது. இந்த காக்ஷியை நமது இளவரசருக்கும் இளவரசிக்கும் காட்டும் பொருட்டு பம்பாய்க்குக் கொண்டுபோகப்படுமாம்.